பக்கங்கள் : பதினான்கு


# உதயன்


Registered as a Newspaper

விலை ரூபா 8:00

www.uthayan.com

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 ஆடி 19 திங்கட்கிழமை (04-08-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:249





நல்லூர்க் கந்தசுவாமி கோவில் மஹோற்சவம் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் அரோகரா கோஷத்தின் மத்தியில் இடம்பெற்ற கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

கொடியேற்றத்திருவிழாவின் போது ஆலயத்தின் உள்ளேயும் வெளியேயும் பெரும் திரளான பக்தர்கள் கூடியிருந்தனர். ஆலயத்துக்கு வெளியே திரண்டிருந்த பக்தர்களையும், அங்கப்பிரதட்சணை செய்து நேர்த்தி நிறைவேற்றுவதையும் படங்களில் காணலாம். (படம்:அலுவலகப் படப்பிடிப்பாளர்)

### ஜோன் அமரதுங்க யாழ்ப்பாணம் வருகின்றார்

யாழ்ப்பாணம்,ஓக.4

உள்துறை அமைச்சரும் கிறிஸ்தவ விவகார அமைச்சருமான ஜோன் அமரதுங்க தனது அமைச்சுக்கு கீழுள்ள திணைக்கள அதிகாரிகள் சகிதம் எதிர்வரும் 10ஆம் திகதி யாழ்ப்பாணம் வருகின்றார்.

ஆள்பதிவுத் திணைக்களம், குடிவரவு, குடியகல்வு திணைக்களம், பொலீஸ் திணைக்களம் ஆகியவற்றின் அதிகாரிகளுடன் வருகை தரவுள்ள அமைச்சர், இந்தத் திணைக்களங்களில் காணப்படும் பிரச்சினைகளை நேரில் ஆராய்வார்.

யாழ்ப்பாணம், மன்னார் மறை மாவட்டங்களின் ஆயர்களின் அழைப்பில், அன்று காலை சென்.பற்றிக்ஸ் கல்லூரியில் இடம்பெறும் சமய நிகழ்ச்சி ஒன்றிலும் அமைச்சர் கலந்துகொள்வார்.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பில் இணக்கங்கண்டு

# அரசு - புலிகள் பேச்சுக்களை ஆரம்பிக்க ஜப்பான் வலியுறுத்து

### நீண்ட காலம் தடைப்பட்டிருப்பது குறித்து கவலை உதவிகள் தொடர்ந்து வழங்கப்படும் என்று உறுதி



யாழ்ப்பாணம்,ஓகஸ்ட்4

**வடக்கு - கிழக்கில் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு நிறுவுவது குறித்து இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் விரைவில் இணக்கம் காண வேண்டும் எனவும், கூடியவிரைவில் அரசும், புலிகளும் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க முன்வரவேண்டும் எனவும் ஜப்பானின் சிரேஷ்ட உதவி வெளிவிவகார அமைச்சரான டெற்சுரோ யானோ நேற்று யாழ்ப்பாணத்தில் வலியுறுத்திக் கூறினார்.**

குறுகிய நேர விஜயமொன்றை மேற்கொண்டு யாழ்ப்பாணம் வந்திருந்த அவர், டோக்கியோ மாநாடு முடிவுற்று இரண்டு மாதங்கள் கழிந்துவிட்ட பின்னரும் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படாதிருப்பது குறித்துக் கவலை தெரிவித்தார்.

இன்றைய நிலைக்கு மத்தியிலும், வடக்கு - கிழக்கில் அவசர மனிதாபிமான உதவிகளை ஜப்பான் தொடர்ந்து வழங்கும் எனவும் அவர் உறுதியளித்தார். இந்த உதவியின் ஒரு பகுதியாக தாய், சிறுவர் சுகாதார பராமரிப்புக்காக 25 கோடி ரூபாவை வழங்க ஜப்பான் தீர்மானிததிருக்கிறது எனவும் அவர் அறிவித்தார்.

நேற்று முற்பகல் 10 மணிக்கு கொழும்பிலிருந்து பலாலி விமான நிலையத்தை வந்தடைந்த ஜப்பானிய பிரதியமைச்சர் யானோ, இணுவிலிலுள்ள அகதிமுகாம்களைச் சென்று

(14 ஆம் பக்கம் பார்க்க)

### கொடியேற்றத் திருவிழாவில் மூவரின் சங்கிலிகள் அபேஸ்!

யாழ்ப்பாணம்,ஓக.4

நல்லூர்க் கந்தன் ஆலய கொடியேற்றத் திருவிழாவான நேற்று திரண்டிருந்த பக்தர்கள் கூட்டத்தின் மத்தியில் மூன்று பெண்களின் தங்கச் சங்கிலிகள் அபகரிக்கப்பட்டன.

வயோதிபப் பெண் ஒருவரின் சங்கிலியை அபகரிக்க முயன்ற பெண் ஒருவர் பக்தர்களிடம் சிக்கினார்.

இந்தப் பெண் சங்கிலியை அறுத்த போது அதன் ஒரு பகுதிமட்டுமே கையில் சிக்கியது. அவ்வேளை, அருகே நின்றவர்கள் அவரைப் பிடிக்க முயலவே அறுத்தெடுத்த சங்கிலித் துண்டை தனது வாயில்போட்டு விழுங்கி விட்டார் என்று கூறப்படுகிறது.

பிரஸ்தாப திருட்டுப் பேர்வழி, புத்தளம் பகுதியைச் சேர்ந்தவர் என்று விசாரணைகளில் தெரியவந்திருக்கிறது.

(14 ஆம் பக்கம் பார்க்க)

### தமிழ்ச்செல்வன் இன்று வன்னி திரும்புவார்

யாழ்ப்பாணம்,ஓக.4

கிழக்கு மாகாணத்தில் விஜயம் மேற்கொண்டிருந்த விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் இன்று காலை வன்னி திரும்புகிறார்.

கடந்த 27ஆம் திகதி முதல் மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களுக்கு விஜயம் செய்த தமிழ்ச்செல்வன், போராளிகள் மற்றும் பொது மக்களுடன் கலந்துரையாடல்களை நடத்தியிருந்தார். அவர் இன்று வன்னி திரும்புகிறார்.

அரசு முன்வைத்துள்ள இடைக்கால நிர்வாகக்கட்டமைப்பு வரைவு விவகாரம் மற்றும் கிழக்கு மாகாண மக்கள் அனுபவிக்கும் இன்னல்கள் தொடர்பாக தமிழ்ச்செல்வன் கலந்துரையாடல்களை நடத்தினார். (ஐ-3)

### வடமராட்சி வடக்கு மீனவர் பிரச்சினை குறித்து ஆராய்வு

வடமராட்சி,ஓக.4

வடமராட்சி வடக்கு மீனவர்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் தொடர்பாக நேற்று நடைபெற்ற முத்தரப்புப் பேச்சுக்களின்போது பல வாதப்பிரதிவாதங்களுக்கு மத்தியில் மீனவர்களின் கோரிக்கைகளுக்கு இணக்கமான முடிவுகள் எட்டப்பட்டன.

முத்தரப்புப் பேச்சு பருத்தித்துறையில் உள்ள 524 ஆவது பிரிகேட் அலுவலகத்தில் நடைபெற்றது. படையினர் தரப்பில் பிரிகேடியர் தலகாகொட, கேணல் இரத்தினாயக்கா, தொண்டமனாறு முதல் கற்கோவளம் வரையான மினி முகாம்களின் பொறுப்பதிகாரிகள் ஆகியோரும், மீனவர்கள் சார்பில் வடமராட்சி வடக்கு கடற்

(14 ஆம் பக்கம் பார்க்க)

### மனித உரிமை அலுவலகத்தில் படைச் சிப்பாய் சரணடைந்தார்!

யாழ்ப்பாணம்,ஓக.4

மானிப்பாய் ஆனைக்கோட்டை இராணுவமுகாமில் இருந்து தப்பி வந்த இளம்சிப்பாய் ஒருவர் மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் நேற்றுச் சரணடைந்தார்.

அநுராதபுர மாவட்டத்தைச் சேர்ந்த எஸ்.பியந்த (வயது-22) என்ற இளஞ் சிப்பாயே நேற்று முற்பகல் 10 மணியளவில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் சரணடைந்துள்ளார்.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலக இணைப்பாளர்,

(14 ஆம் பக்கம் பார்க்க)

### இத்தாலி செல்ல இருந்த படகுகளிலிருந்து சூடு!

#### கடற்படையினர் வளைத்துப் பிடித்தனர்

கொழும்பு,ஓக.4

சட்டவிரோதமாக இத்தாலி செல்ல முயன்ற 23பேர் இலங்கைக் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டிருக்கின்றனர்.

வென்னப்புவ கடற்பரப்பில் கரையிலிருந்து பன்னிரண்டு கடல் மைல் தொலைவில் இரு படகுகள் சந்தேகத்திற்கிடமான முறையில் நங்கூரமிடப்பட்டு நிறுத்திவைக்கப்பட்டிருந்தன என்றும் -

இதனை அவதானித்த கடற்படையினர் அப்படகுகளை சோதனையிட முயன்றவேளை படகிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது எனவும் - கூறப்படுகிறது.

கடற்படையினரும் திருப்பித் தாக்கியுள்ளார்கள். அவ்வேளை படகிலிருந்த ஒருவர் காயமடைந்துள்ளா

(14 ஆம் பக்கம் பார்க்க)

### தமிழீழக் காவல்துறையினருக்கு கண்காணிப்புக்குழு நற்சான்று!

#### சீறுகின்றது சிங்களப் பத்திரிகை

கொழும்பு,ஓக.4

புலிகளின் பொலீஸார் திறமையான செயல்வீரர்களென யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் டெலிவ்சன் சான்றிதழ் வழங்கியுள்ளார். இதுகுறித்து பொலீஸ்மா அதிபர் வெட்கித் தலைகுனிய வேண்டும்.

கொழும்பில் இருந்து வெளியாகும் 'திவயின' என்ற சிங்கள நாளிதழ் இப்படி விமர்சித்துள்ளது.

நோர்வேக் காரரான டெலிவ்சன் மேற்படி கருத்தை வெளியிட்டதன் மூலம் சிறிலங்கா பொலீஸ் செயற்திறமையற்றதென்பதையும் பகிரங்கமாகவே குறிப்பிட்டுள்ளார்.

டெலிவ்சன் தெரிவித்துள்ள கருத்தை மறுத்து அல்லது எதிர்த்து பொலீஸ்மா அதிபரோ அல்லது உயர் பொலீஸ் அதிகாரிகள் எவருமோ குரல் எழுப்பவில்லை. டெலிவ்சனின் கருத்தை இவர்கள் ஏற்றுக்கொள்கின்றனரா?

(14 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# இடைக்கால நிர்வாகத்தினை புலிகளிடம் வழங்கினாலே சமாதானம் நிரந்தரமாகும்

## ஜப்பானியக் குழுவிடம் பொது அமைப்புக்கள் மகஜர்

யாழ்ப்பாணம்,ஒக.4

சகல அதிகாரமும் கொண்ட இடைக்கால நிர்வாகமொன்றை விடுதலைப் புலிகளிடம் வழங்குவதன் மூலமே நிலையான சமாதானத்தைக் கட்டியெழுப்பமுடியும்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்த ஜப்பானின் சிரேஷ்ட பிரதி வெளிவிவகார அமைச்சர் டெட்சுரோ யானோ தலைமையிலான குழுவிடம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியம், நீதிக்கும் சமாதானத்துக்குமான ஆணைக்குழு மற்றும் வலிகாமம் கோட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் ஆகிய அமைப்புக்கள் தனித்தனியாக ஜப்பானியக் குழுவிடம் கையளித்த மகஜர்களிலேயே இவ்விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

நீதிக்கும் சமாதானத்துக்குமான ஆணைக்குழு கையளித்த அறிக்கையில் உள்ளதாவது;-

சமாதான முயற்சிகள் தொடர வேண்டுமாக இருந்தால் அவசரமாக நடைமுறைப்படுத்த வேண்டிய விடயங்கள் குறித்து ஏற்கனவே எமது ஆணைக்குழு வலியுறுத்தி இருந்தது. ஆயினும், படைத்தரப்பினரும், அரசுத் தலைவர்களும் அதனைக் கவனத்தில் எடுக்கத் தவறிவிட்டனர்.

வடக்கு - கிழக்குப் பகுதியை இராணுவ மயப்படுத்துவதும், உயர் பாதுகாப்பு வலயங்கள் விரிவுபடுத்தப்படுவதும், பலப்படுத்தப்படுவதும் அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான யுத்தநிறுத்த உடன்படிக்கையின் சரத்து 1.32 ஐ மீறுவதாக உள்ளன.

சுமார் 12 வருடங்களுக்கு மேலாக - பத்துத் தடவைகளுக்கும் அதிகமாக - இடம்பெயர்ந்துள்ள மக்கள், படையினரின் உயர் பாதுகாப்புவலயம் காரணமாக மீளக்குடியமர முடியாத நிலையிலுள்ளனர்.

இடைக்கால நிர்வாகம் புலிகளிடம் வழங்கப்பட வேண்டியதன் அவசரம் குறித்து அமைச்சர் மிலிந்த மொறகொடவுடனான சந்திப்பின் போதும் நாம் வலியுறுத்தியிருந்தோம்.

பிரதமருக்கும், ஜனாதிபதிக்கும் இடையிலான இழுபறி நிலைமை இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதில் தடையாகவுள்ளது. இது போன்றே கடந்த ஐம்பது வருடங்களாக அரசுக்கும், எதிர்க்கட்சிக்கும் இடையிலான இழுபறிநிலை இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதில் தடையாக இருந்தது.

மேற்படி பிரச்சினை தீர்க்கப்படுவதே சமாதான முயற்சிகளை முன்நகர்த்த உதவும் - என்றுள்ளது.

வலிகாமம் கோட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் தனது அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:-

யாழ்ப்பாணத்தில் பெருமளவில் படையினர் நிலைகொண்டுள்ளனர். அத்துடன், உயர் பாதுகாப்பு வலயங்களையும் அமைத்துள்ளனர். இதனால் மக்கள் விவசாயம், கடற்றொழில் மற்றும் மத வழிபாடு ஆகியவற்றை மேற்கொள்ளத் தமது சொந்த இடங்களுக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

மீனவர்களுக்கு கடற்றொழிலில் ஈடுபட அனுமதி வழங்குவதில் படையினர் பலத்த கட்டுப்பாடுகளை விதிக்கின்றனர். இது மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு முரணான விடயமாகும்.

இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்துவதும், புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதும் இன்றைய சமாதானத்துக்கான காலத்தில் அவசியமான பணிகளாகும். ஆனால், இந் நடவடிக்கைகளுக்கு குந்தகம் விளைவிப்பதாக படையினரின் நடவடிக்கைகள் அமைந்துள்ளன.

தமிழ்மக்களின் ஏக பிரதிநிதிகளான புலிகளிடம் இடைக்கால நிர்வாகம் வழங்கப்பட வேண்டும். அதன் மூலமே யுத்தத்தினால் சிதைவடைந்துள்ள வடக்கு-கிழக்குப் பகுதிகளை மீளக்கட்டியெழுப்ப முடியும். அதுவே சமாதான முயற்சிகளுக்கும் வலுச்சேர்ப்பதாக அமையும் - என்றுள்ளது.

யாழ். மாவட்ட மனித நேய அமைப்புக்களின் ஒன்றியம் கையளித்த அறிக்கையில் உள்ளதாவது:-

சுமார் இரண்டு தசாப்தங்களின் பின்னர் அரசுக்கும், புலிகளுக்கும் இடையில் யுத்தநிறுத்த உடன்படிக்கை ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. சர்வ தேசப் பிரதிநிதித்துவமானது, சமாதான முயற்சிகளை மேலும் ஊக்குவிப்பதாக அமைந்துள்ளது.

புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளில் முக்கிய பங்கை வகிக்கும் ஜப்பானின் ஆதரவு மிக மகிழ்ச்சி அளிப்பதாகவும் உள்ளது.

மக்களின் இயல்பு வாழ்வை ஏற்படுத்தும் பொருட்டு புலிகளுக்கும் அரசுக்கும் இடையே ஏற்படுத்தப்பட்ட யுத்தநிறுத்த உடன்படிக்கை இன்னமும் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. இதனால், சமாதான முயற்சியில் ஏற்பட்டுள்ள கடினமான கட்டத்தைத் தாண்டுவதற்கு புதிய அணுகுமுறை தேவைப்படுகின்றது.

யாழ். மாவட்டத்தில் 10 லட்சம் மக்கள் இருந்ததாகக் கணக்கிடப்பட்டது. ஆனால், இடம்பெயர்ந்த மக்களில் படையினரின் உயர் பாதுகாப்பு வலயக் கெடுபிடி காரணமாக 50 சதவீதத்துக்கும் அதிகமானோர் மீளக்குடியமரத் திரும்பவில்லை.

2 ஆயிரத்து 124 குடும்பங்கள் நலன்புரி நிலையங்களில் வாழ்கின்றன. 20 ஆயிரத்துக்கும் அதிகமான குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன. மற்றும் ஏராளமானோர் வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந்துள்ளனர்.

இடம்பெயர்வினால் அதிகம் பாதிகப்பட்ட பகுதியாக வலிகாமம் வடக்குப் பிரதேசம் உள்ளது.

1987ஆம் ஆண்டு இடம்பெயர்ந்த இப்பகுதி மக்கள் 6 ஆயிரத்து 110 ஹெக்ரெயர் நிலப்பரப்பில் மீளக்குடியமர முடியாதுள்ளனர். சுமார் 64 பாடசாலைகள், உயர் பாதுகாப்பு வலயத்தினுள் இயங்காத நிலையிலுள்ளன. அவை யுத்தத்தினால் மோசமாகச் சிதைவுற்றுள்ளன.

விவசாயிகள் தமது விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதுள்ளனர். பல்லாயிரக்கணக்கான விவசாயிகள் தமது நாளாந்த வருமானத்தை இழந்துள்ளனர்.

கடற்படையினரின் கடுமையான செயற்பாடுகள் காரணமாக கடற்றொழிலாளர்கள் கடற்றொழிலில் ஈடுபட முடியாதுள்ளனர்.

வடமாகாண கடற்றொழிலாளர் சமாசம், ஐஸ் தொழிற்சாலையை அமைப்பதற்கு படையினர் தடைவிதித்துள்ளனர். ஐந்நூறுக்கும் அதிகமான மீனவக்குடும்பங்கள் மீளக்குடியமர அனுமதி இன்றிப் பாதிக்கப்பட்டுள்ளன. இக்குடும்பங்களுக்கு இதுவரை எந்த நஷ்டஈடும் வழங்கப்படவில்லை.

சுகாதார வசதிகளைப் பொறுத்தவரை, மருத்துவ நிபுணர்கள் மற்றும் மருத்துவர்கள் யாழ். வைத்திய சாலையில் போதுமானவர்களாக இல்லை.

யாழ்ப்பாணத்தில் சுமார் 83 ஆயிரம் பேர் வேலையற்றவர்களாகவும் ஒரு லட்சத்துப் பத்தாயிரம் பேர் தகுதிக்குரிய வேலையற்றவர்களாகவும் உள்ளனர்.

குடாநாட்டில் 38 ஆயிரத்து ஐந்நூறு வீடுகள் யுத்தத்தினால் முற்றாகச் சேதமடைந்துள்ளன. 68ஆயிரம் வீடுகள் பகுதியாகச் சேதமடைந்துள்ளன.

மனித உரிமைகளைப் பொறுத்தவரை பயங்கரவாதத் தடைச்சட்டம் என்ற ஏதேச்சதிகாரத்தை வழங்கும் சட்டம் முக்கியமாக நீக்கப்படவேண்டியதாகும்.

சேதமடைந்த வீடுகளைப் புனரமைப்பதற்கென வழங்கப்படும் நஷ்டஈடுகள் சீரானதாக இல்லை. செல்வாக்குள்ள பிரமுகர்கள் மட்டும் சுமார் 5 லட்சம் ரூபாவுக்குமேல் நஷ்டஈடாகப் பெறுகின்றனர். ஏனையோர் ஆகக் கூடியது ஒரு லட்சம் ரூபாவை மட்டும் பெறமுடியும்.

வடக்கு - கிழக்கில் இடைக்கால நிர்வாகம் ஒன்றைப் புலிகளிடம் வழங்குவதன் மூலம் நிலையான சமாதானத்தைக் கட்டியெழுப்புவது சாத்தியமாகும் - இப்படி அதில் உள்ளது. (ஒ-9-5)









ஜப்பானின் சிரேஷ்ட உதவி வெளிவிவகார அமைச்சர் டெற்சுரோ யானோ நேற்று கொழும்புத்துறை துரையப்பா மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற வைபவத்தில் கலந்துகொண்டபோது எடுக்கப்பட்ட படங்கள்.

## சமாதானத்துக்கான மடுமாதா சொரூப பவனி

கொழும்பு,ஒக.4

சமாதானத்துக்கும் இன நல்லிணக்கத்துக்குமான மடுமாதா திருச்சொரூப பவனி - ஆத்மீக யாத்திரை எதிர்வரும் 8ஆம் திகதி காலை 8 மணிக்கு கொழும்பு டீன்ஸ் வீதி பாத்திமா தேவாலயத்திலிருந்து ஆரம்பமாகி, நீர்கொழும்பு சிலாபம் வழியாக வவுனியாவைச் சென்றடையும். சமூக சமய நடுநிலையம் இதை ஏற்பாடு செய்திருக்கிறது.

இந்த மடுமாத திருச்சொரூபம் சமீபத்தில் அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனவினால் ரோமாபுரிக்கு எடுத்துச்செல்லப்பட்டு அங்கே திருத்தந்தை அருளப்பர் சின்னப்பரால் ஆசீர்வதிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்தத் திருச்சொரூபம் ஆத்மீக யாத்திரையின்போது பவனியாக எடுத்துச்செல்லப்பட்டு வவுனியா-மன்னார் வீதிச் சந்தியில் அமைக்கப் பட்டுள்ள விசேட பீடத்தில் பொதுமக்களின் வழிபாட்டுக்காக ஸ்தாபிக்கப்படும்.

## மூதூர் ஜின்னா நகரில் நேற்று முன்னாள் சார்ஜன்ட் சுட்டுக்கொலை

திருகோணமலை,ஒக.4

மூதூர் தெற்கு ஜின்னா நகர் (மூதூர் 58 கிராமம்) என்னும் இடத்தில் நேற்று அதிகாலை குடும்பஸ்தர் ஒருவர் இனம்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். ரிஸ்வான (வயது32) எனும் முன்னாள் பொலீஸ் சார்ஜன்டே துப்பாக்கிச் சூட்டில் இறந்தவராவார்.

இறந்தவரின் சடலம் மூதூர் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இவர் மூன்று வருடங்களுக்கு முன்னர் பொலீஸ் சேவையில் இருந்து இடைநிறுத்தப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. பின்னர் இவர் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்தார்.

ரிஸ்வானின் படுகொலை காரணமாக நேற்றுக்காலை அப்பகுதியில் சற்று பதற்றம் நிலவியது. பின்னர் நிலைமை வழமைக்குத் திரும்பிவிட்டது. கொலையில் ஈடுபட்டவர்கள் யாரும் இதுவரை கைது செய்யப்படவில்லை என அறியப்படுகின்றது.

(ஐ)

## மீளக்குடியமர்ந்தோருக்கு 25 ஆயிரம் ரூபா வழங்க மேலும் நிதி கிடைத்தது

யாழ்ப்பாணம்,ஒக.4

குடாநாட்டில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு மீள்குடியமர்வுக் கொடுப்பனவாக 25 ஆயிரம் ரூபா வழங்கும் திட்டத்துக்கு மேலும் 10 கோடி ரூபா யாழ்செயலகத்திற்த கிடைத்துள்ளது.

இந்த நிதி மூலம் மேலும் பலருக்கு கொடுப்பனவை வழங்க யாழ்செயலகம நடவடிக்கை எடுத்துள்ளது.

இக்கொடுப்பனவை வழங்க ஏற்கனவே 30 கோடி ரூபா செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. அந்த நிதி மூலம் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டதை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டதால், மேலும் 10 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்தும் இக்கொடுப்பனவை வழங்க நிதி வழங்கப்படும் என 'நிக்கொட்' நிறுவனத்தினால் உறுதி அளிக்கப்பட்டுள்ளது.

(ஐ-3)

# மீசையை எடுத்துவிட்டு தாடியுடன் வாழும் சதாம்!

உயிர் தப்புவதற்காக மீசையை எடுத்துவிட்டு தாடியுடன் பதுங்கி வாழும் சதாம் ஹுசைன், அமெரிக்க இராணுவத்தை எதிர்த்துப் போராடுமாறு ஈராக் மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

- இவ்வாறு அமெரிக்கப் புலனாய்வுத்துறை தெரிவித்துள்ளது.

ஈராக்கில் தலைமறைவாக இருக்கும் முன்னாள் அதிபர் சதாம் ஹுசைனையும் அவருக்கு நெருக்கமானவர்களையும் அமெரிக்க இராணுவம் தேடிவருகிறது. மொசூல் நகரில் ஒரு வீட்டில் பதுங்கியிருந்த சதாம் ஹுசைனின் மகன்கள் உதய், குசே, பேரன் முஸ்தபா ஆகியோரை சமீபத்தில் அமெரிக்கப் படையினர் சுட்டுக்கொன்றனர்.

சதாம் இன்னும் ஈராக்கில்தான் எங்கோ பதுங்கியிருக்கிறார். யாருக்கும் தெரியாமல் தனது நெருங்கிய நண்பர்கள் மற்றும் உறவினர்கள் வீடுகளிலும் பதுங்கு குழிகளிலும் அவ்வப்போது தங்குகிறார். அமெரிக்கப் படையினரிடம் பிடிபடாமல் இருப்பதற்காக சதாம் ஹுசைன் தனது மீசையை எடுத்துவிட்டு தாடி வளர்த்து தோற்றத்தை மாற்றிக்கொண்டு இருப்பதாக சில ஈராக்கியர்கள் கூறியதாக அமெரிக்கப் புலனாய்வுத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சதாம் ஹுசைனின் கைவசம் கணிசமான பணமும் உள்ளது. சில மெய்க்காப்பாளர்கள் மட்டுமே அவருடன் உள்ளனர். அவர்கள் தானியங்கி துப்பாக்கிகள் வைத்திருக்கிறார்கள் - என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ)



ஈராக் அதிபர் பதவியிலிருந்து கவிழ்க்கப்பட்ட சதாம் ஹுசைன் மாறு வேடத்தில் இருந்தால், எப்படியிருப்பார் என்பதைக் காட்ட, டிஜிற்றல் தொழில்நுட்பத்தில் மாற்றப்பட்ட வடிவங்கள். அரேபிய பாரம்பரிய உடையில், தாடியுடன், தலைவழுக்கை, நரைத்தமுடி, மீசை இப்படி பல்வேறு தோற்றங்கள் வடிவமைக்கப்பட்டு, அமெரிக்கத் துருப்புகளிடம் வழங்கப்பட்டுள்ளன.



அமெரிக்கப்படையினரால் கொல்லப்பட்ட சதாமின் புதல்வர்கள் மற்றும் பேரனது சடலங்கள் வடக்கு ஈராக்கில் உள்ள சதாமின் சொந்த ஊரான கில்கிட்டில் உள்ள அவுஜா அடக்க ஸ்தலத்தில் நேற்று முன்தினம் நல்லடக்கம் செய்யப்பட்டது. அமெரிக்கப்படையினரின் கெடுபிடிகள் காரணமாக சதாமின் நெருங்கிய உறவினர்கள் சிலர் உட்பட நூறுக்கும் குறைவான எண்ணிக்கையினரே இறுதிச் சடங்கில் கலந்துகொண்டனர். உதய், குசே மற்றும் முஸ்தபா ஆகியோரின் சமாதிகளைப் படத்தில் காணலாம்.

# குவாண்டனாமா குடா சிறைக் கைதிகளுக்கு தீங்கு விளைவித்தால் அமெரிக்கா அழியும்!

## பின்லேடனின் நெருங்கிய சகா எச்சரிக்கை

கியூபாவின் குவாண்டனாமா குடாவில் உள்ள அமெரிக்கச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அல்கெய்டா இயக்க உறுப்பினர்கள் எவருக்கேனும் தீங்கு விளைவிக்கப்படுமாயின் அதற்காக, அமெரிக்கா மிகப் பெரிய விலையைக் கொடுக்க நேரிடும்.

- இவ்வாறு அல்-அராபியா தொலைக்காட்சியில் ஒலிபரப்பான ஒலிநாடாவில் ஓஸாமா பின்லேடனின வலது கரம் என்று கூறப்படும் அல்-சவாரி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஆப்கான் போரின்போது பிடிபட்ட தலிபான் மற்றும் அல்கெய்டா உறுப்பினர்களை கியூபாவில் உள்ள அமெரிக்காவின் இராணுவத் தளத்தில் அமெரிக்கா சிறைவைத்துள்ளது. எவ்வித குற்றங்களையும் சுமத்தாது, வழக்கும் தொடராது அமெரிக்கா அவர்களை சுமார் இரண்டு ஆண்டுகளாக சிறைவைத்துள்ளது.

இந்நிலையிலேயே, அல்கெய்டாவின் இந்த எச்சரிக்கை வெளியிடப்பட்டுள்ளது.




அல்-சவாரி

குவாண்டனாமா சிறையில் உள்ளவர்களில் ஒருவரேனும் இறக்கவேண்டி வந்தால், அதற்கான விலை என்னவென்பதை அமெரிக்காவுக்கு உணர்த்துவோம். இதுவரை அமெரிக்கா சிறு தாக்குதல்களினாலேயே பாதிக்கப்பட்டிருந்தது. இனிமேல் தான் உண்மையான சண்டை தொடங்கவிருக்கிறது.

- என்று அந்த ஒலி நாடாவில் எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது. அல்-சவாரி எகிப்திய கண்சிகிச்சை நிபுணர் என்பது குறிப்பிடத்தக்கது.

குவாண்டனாமா குடா சிறையில் அறுநூறுக்கும் மேற்பட்ட அல்கெய்டா மற்றும் தலிபான் உறுப்பினர்களை அமெரிக்கா அடைத்து வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



குவாண்டனாமாச் சிறையில் கைதி ஒருவர் எடுத்துச் செல்லப்படும் காட்சி.

# அயோத்தியில் ராமர் கோயில் கட்டியே தீருவோம்; பரமஹம்சர் இறுதிச் சடங்கில் வாஜ்பாய் சபதம்!

அயோத்தியில் ராமஜன்மபூமியில் ராமருக்குப் பிரமாண்டமான கோயில் கட்டியே தீருவோம். மறைந்த ராமஜன்மபூமி அறக்கட்டளைத் தலைவர் மகந்த் ராமச்சந்திர பரமஹம்சரின் இறுதி ஆசையை நிறைவேற்றியே தீருவோம் என்று பிரதமர் வாஜ்பாய், துணைப் பிரதமர் அத்வானி ஆகியோர் பரஹம்சரின் இறுதிச் சடங்கில் வெள்ளிக்கிழமை சபதமிட்டனர்.

பரமஹம்சரின் இறுதிச்சடங்கு அயோத்தியில் சரயு நதிக் கரையில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை நடந்தது. அங்கு திரண்டிருந்த கூட்டத்தினர் மத்தியில் வாஜ்பாய், அத்வானி உட்பட பலர் பேசினர். அக்கூட்டத்தில் வாஜ்பாய் தெரிவித்ததாவது:-

பரமஹம்சரின் இறுதி ஆசையை நாங்கள் நிறைவேற்றுவோம். ராமஜன்மபூமியில் பிரமாண்டமான ராமர் கோயிலைக் கட்டுவோம். அதற்குத தடையாக இருக்கும் அனைத்து முட்டுக்கட்டைகளும் நீக்கப்பட்டு விடும் என்பதில் முழு நம்பிக்கையுடன் இருக்கிறேன். கோயிலைக் கட்டுவதற்கு எதிர்ப்புத் தெரிவிப்போருக்கு மனமாற்றம் ஏற்படும். நாம் ஒன்றுபட்டு பரமஹம்சரின் கனவை நனவாக்குவோம். அவரது சிதையின்முன் இதை நம்பிக்கையுடன் கூறுகிறேன். அவரது இறுதி ஆசையை நிறைவேற்ற ஒவ்வொருவரும் பாடுபடவேண்டும். தனது இறுதி மூச்சு வரை ராமர் கோயில் கட்டுவதற்காகப் போராடியவர் பரமஹம்சர். அதேநேரத்தில் அதில் உள்ள சிக்கல்களை அவர் உணர்ந்திருந்தார். அண்மையில் நாம் வெளிநாட்டுக்குப் பயணம் சென்றபோது அவரது ஆசியைக் கோரினேன். எனக்கு ஆசி வழங்கிய அவர், இராமர் கோயிலுக்கான போராட்டம் தொடரும் என்று கூறினார். இந்தியா மகிழ்ச்சியான பணக்கார நாடாக மாறும் என்பது அவரது கனவு. அவரது போராட்டம், தியாகம், அர்ப்பணிப்பு உணர்வை யாரும் மறுக்கமுடியாது என்றார் வாஜ்பாய்.

(ஐ)

# நீண்ட நாள் பதவி வகித்து பிரிட்டிஷ் பிரதமர் சாதனை

பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளயர், கடந்த சனிக்கிழமையுடன் நீண்ட நாள் பதவிவகித்த தொழிலாளர் கட்சிப் பிரதமர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.

இதற்கு முன்னர், தொழிலாளர் கட்சியைச் சேர்ந்த கிளேமெண்ட் அட், ஆறு ஆண்டுகளும் 92 நாள்களும் பதவி வகித்து சாதனைபடைத்தார். இந்தச் சாதனையைப் பிளயர் நேற்றுமுன்தினம் முறியடித்தார்.

இந்தச் சாதனையைப் பெரிய விழாவாகக் கொண்டாடவேண்டாம் என்று அமைச்சர்களுக்கும், தனது கட்சியைச் சேர்ந்தவர்களுக்கும் பிளேயர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

விஞ்ஞானி டேவிட் கெலியின் மர்ம மரணம் குறித்து விசாரணைகள் நடைபெற்றுவரும் வேளையில், இவ்வாறான கொண்டாட்டங்கள் தேவையற்றவை என்று பிரதமர் பிளயர் எண்ணியிருக்கலாம் என பிரிட்டிஷ் பத்திரிகைகள் தெரிவித்துள்ளன.

(ஒ)

# இஸ்ரேலியச் சிறைகளில் கைதிகள் உண்ணாவிரதம்

இஸ்ரேலிய சிறைகளில் உள்ள பலஸ்தீனக் கைதிகள் நேற்றுமுன்தினம் உண்ணாவிரத போராட்டம் நடத்தினர்.

இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்கும் இடையிலான எல்லைப் பிரச்சினை ஓய்ந்தபாடில்லை. இஸ்ரேலிய நகரங்களில் தாக்குதலை நடத்துவது பலஸ்தீனத் தீவிரவாதிகளின் வாடிக்கை. இதற்கு பழிவாங்கும் நடவடிக்கையாக இஸ்ரேலிய இராணுவம் பலஸ்தீனப பகுதியில் நுழைந்து தீவிரவாதத் தலைவர்களை ஒடுக்குவது தொடர்ந்து நடந்து வந்தது. அமெரிக்காவின் தலையீட்டின் பேரில் கடந்த ஜூன் மாதம் 29ஆம் திகதி முதல் இரு தரப்புக்கும் இடையே போர்நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தாகியுள்ளது. இந்நிலையில், இஸ்ரேலிய சிறையில் இருக்கும் 6 ஆயிரம் கைதிகளையும் விடுவிக்கவேண்டும் என பலஸ்தீன அமைச்சர் அப்துல் ரசாக் வற்புறுத்தியிருந்தார்.

ஆனால், இந்தக் கோரிக்கையை ஏற்க இஸ்ரேல் மறுத்துவிட்டது. ஏற்கனவே நல்லெண்ணத்தின் அடிப்படையில் 250 கைதிகள் விடுவிக்கப்பட்டதாகவும் பலஸ்தீனத்தின் கோரிக்கையை ஏற்று மேலும் 540 கைதிகளை விடுவிபபதாகவும் இஸ்ரேல் அறிவித்தது. இஸ்ரேலின் பிடிவாதப்போக்கைக கண்டித்து இரு நாள்களின் முன்னர் தெற்கு இஸ்ரேலில் அஷ்கெலாண் பகுதியில் உள்ள ஷிக்மா சிறையில் கைதிகள் கலவரத்தில் ஈடுபட்டனர். கூர்மையான ஆயுதங்களை அவர்கள், காவலர்கள் மீது வீசினர். செய்தித் தாள்கள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன. இந்த கலவரத்தில் 18 பேர் காயமடைந்தனர். இக்கலவரத்தின் எதிரொலியாகவே கைதிகள் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினர்.

(ஐ)

## நாய்க்கு சொத்தை எழுதியவர்

தன்னுடைய 18 கோடி ரூபா பெறுமதியுள்ள சொத்தை மகள்களுக்கு பகிர்ந்துகொடுக்காமல் நாய்கள் அறக்கட்டளை நிலையத்துக்கு எழுதிக்கொடுத்துள்ளார் பிரிட்டனைச் சேர்ந்த முதியவர் ஒருவர்.

இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது:-

பிரிட்டனைச் சேர்ந்தவர் ஜோசப் லீக் (வயது 90). இவருக்கு 18 கோடி ரூபா மதிப்புள்ள சொத்து இருக்கிறது. ஆனாலும், மிகவும் சாதாரணமாக வாழ்ந்து வந்த லீக், பழைய ஆடைகளையே உடுத்தி வந்தார்.

மின்சாரக் கட்டணத்தை மிச்சப்படுத்துவதற்காக பக்கத்து வீட்டுக்குச் சென்று தொலைக்காட்சி பார்ப்பார். இந்நிலையில், இவர் திடீரென மரணமானார்.

இவருடைய இரண்டு மகள்களும் தந்தையின் சொத்தைப் பிரித்து எடுக்க முற்பட்ட வேளையிலேயே, இவர் தனது சொத்து முழுவதையும் நாய்கள் அறக்கட்டளை நிலையத்துக்கு எழுதிக் கொடுத்திருந்தமை தெரியவந்தது.

(ஐ)

# அணுகுண்டு வீச்சு நினைவிடம் விஷமிகள் வைத்த தீயில் சேதம்

டோக்கியோ,ஒக.4

ஜப்பானில் ஹிரோசிமா நகரில், அணுகுண்டு வீச்சால் ஏற்பட்ட அழிவை நினைவுகூரும் வகையில் அமைக்கப்பட்டுள்ள நினைவிடத்துக்கு விஷமிகள் வெள்ளிக்கிழமை தீ வைத்தனர். அங்கு அஞ்சலி செலுத்தும்வகையில் ஜப்பானிய சம்பிரதாயப்படி பல்லாயிரக்கணக்கானவர்கள் அன்புடன் வழங்கியிருந்த ஆயிரக்கணக்கான காகிதக் கொக்குகள் அத்தீயில் எரிந்து நாசமாகின.

தகவல் அறிந்து விரைந்து வந்த தீயணைப்புப் படையினர் அத்தீயை அணைத்தனர். எனினும், பாதியைத் தான் காப்பாற்ற முடிந்தது. வண்ணக்காகிதங்களைக் கையினால் மடித்துச் செய்யப்பட்டவை அக் காகிதக் கொக்குகள். ஒருவர் நீண்ட நாள் வாழ வாழ்த்திக் கொடுக்கப்படுபவை. எனவே, ஜப்பானில் அவை நீண்ட ஆயுளின் சின்னமாகக் கருதப்படுகின்றன. ஆயிரம் காகிதக் கொக்குகளை ஒருவர் செய்து சமர்ப்பணம் செய்தால், அவர் நினைத்த காரியம் ஒன்று நிறைவேறும் என்ற நம்பிக்கையும் ஜப்பானில் உண்டு.

இரண்டாம் உலகப்போரின் போது, 1945 ஓகஸ்ட் 6 ஆம் தேதி ஹிரோஷிமா மீது அமெரிக்கா அணுகுண்டு வீசியது. அதில் பல்லாயிரக்கணக்கானோர் இறந்தனர். அதன் 58ஆவது ஆண்டு நினைவு நாளுக்கு சில நாள்களுக்கு முன் மேற்கூறிய விஷமச் செயல் நடந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

## குஜராத்தில் 8 பேர் பலி!

குஜராத் மாநிலத்தில் உள்ள அடுக்கு மாடிக்கட்டடம் ஒன்றில் நேற்றுக்காலை நிகழ்ந்த வெடிவிபத்தில் 8பேர் உயிரிழந்தனர். 30பேர் காயமடைந்தனர்.

இப்பகுதியில் வைரம் அறுக்கும் தொழிலுக்காகப் பயன்படுத்தும் வாயு சிலிண்டர் வெடித்ததில் இந்த விபத்து நிகழ்ந்திருக்கலாம் என்று பொலீஸார் கூறியுள்ளனர்.

கட்டடம் இடிந்து வீழ்ந்ததில் அதன் இடிபாடுகளுக்கிடையில் 50இற்கும் மேற்பட்டவர்கள் சிக்கியிருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

# பாகிஸ்தானில் வெடிபொருள் களஞ்சியம் வெடித்துச் சிதறியதில் 60 பேர் மரணம்!

பாகிஸ்தானில் நேற்று வெடிபொருள்கள் களஞ்சியம் ஒன்று வெடித்துச் சிதறியதில் அறுபது பேர் உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர். இந்த அனர்த்தம் நடந்த கிராமத்தின் ஒரு பகுதி எரிந்து சாம்பராகியுள்ளது.

வெடிபொருள் களஞ்சியத்திற்கு அருகே இருந்த வீட்டில் ஏற்பட்ட மின் ஒழுக்கே இந்த அனர்த்தம் ஏற்படக் காரணம் என்று கூறப்படுகிறது.

தலைநகர் இஸ்லாமாபாத்தில் இருந்து 270 கி.மீற்றர் தூரத்திலுள்ள ஜில்ஜிற் என்ற இடத்திலேயே இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

பாகிஸ்தான் தொலைக்காட்சி இந்த அனர்த்தம் குறித்துக் கூறுகையில், வெடிபொருள் களஞ்சியம் வெடித்துச் சிதறுவதற்கு சதிவேலை காரணம் என்றும் இச்சம்பவத்தில் மேலும் பலரைக் காணவில்லை என்றும் கூறியது.

'வெடிச் சத்தத்தைக் கேட்டு திடீரென எழுந்து வீட்டிற்கு வெளியே சென்றபோது மனித உடல்கள் காற்றில் வீசப்பட்டதைக் கண்டேன்' என்று அந்தக் கிராமத்தில் உள்ள ஒருவர் தெரிவித்தார்.

காயமடைந்தவர்கள் ஹெலிகொப்டர் மூலம் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். இச்சம்பவத்தை அடுத்து அந்தக் கிராமம் முழுவதும் துக்கம் அனுஷ்டிக்கப்படுகிறது.

## வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை, மல்லாகம்.

### அறிவித்தல்

வலி.வடக்கு பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் புதிதாகக் கட்டடம் கட்டுதல், மதில் கட்டுதல், பழைய கட்டடங்களைப் புதுப்பித்தல் போன்ற சகல கட்டட வேலைகளும் பிரதேச சபையின் அங்கீகாரம் பெற்ற பின்பே ஆரம்பிக்கப்படல் வேண்டும். தவறுவோர் மீது 1987ஆம் ஆண்டு 15ஆம் இலக்க பிரதேச சபைக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 41(2) இற்கு அமைவாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை இத்தால் அறியத் தருகின்றேன்.

பொ.வைரமுத்து
செயலாளர்,
வலி.வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை, மல்லாகம்.

வலி.வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை, மல்லாகம்.
01.08.2003. (சி-29273) (13-16-24)

## பயிற்சி முடித்த ஆசிரியர் நியமனம்

பலாலி, கோப்பாய் ஆசிரிய கலாசாலைகளில் இருவருடப் பயிற்சியைப் பூர்த்திசெய்தவர்களில் 25பேர் தென்மராட்சி வலயப் பாடசாலைகளுக்கு கல்வித் திணைக்களத்தினால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் 7 பேர் ஆரம்பக் கல்வியிலும், 5 பேர் ஆங்கிலத்திலும், தலா மூவர் இந்துசமயம், விஞ்ஞானப் பாடங்களிலும், தலா இருவர் தமிழ், கணிதப்பாடங்களிலும் தலா ஒருவர் கிறிஸ்தவம், வர்த்தகம், சித்திரம் ஆகிய பாடங்களிலும் விசேட பயிற்சிபெற்றவர்களாவர். (ஒ-15)

## மாநகரசபை அறிவித்தல்

### பகிரங்க ஏலம்

கஸ்தூரியார் வீதியிலுள்ள துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் 06.08.2003 தொடக்கம் 31.12.2003 வரை நடத்துவதற்கு பகிரங்க ஏலம் 05.08.2003 செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு மாநகரசபை அலுவலகத்தில் நடைபெறும். பங்குபற்றுபவர்கள் கேள்விப் பிணைப் பணமாக ரூபா 1000.00 செலுத்தல்வேண்டும். சித்தி பெறுபவர்கள் முழுப்பணமும் ஒரேதடவையில் செலுத்துதல்வேண்டும். மேலதிக விவரங்களை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

இ.இராமலிங்கம்
ஆணையாளர்,
மாநகரசபை, யாழ்ப்பாணம்.

02.08.2003. (சி-29277) (13-16-24)

## மாநகர சபை

## மீள் கேள்வி அறிவித்தல் - 2003

கீழ்க்குறிப்பிட்ட வீதி வேலைகளுக்கான மீள் கேள்விகள் "இக்ராட்" நிறுவனத்தில் தரம் '10' அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள ஒப்பந்தகாரர்களிடமிருந்து என்னால் கோரப்படுகின்றன.

*மீள் கேள்வி பத்திரங்கள் வழங்கப்படும் கடைசித்திகதி:-* **15.08.2003 பி.ப. 3.00 மணி**
*மீள் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி:-* **18.08.2003 பி.ப. 2.00 மணி**
*மீள் கேள்விகள் திறந்து பரிசீலிக்கும் திகதி:-* **18.08.2003 பி.ப. 2.30 மணி**

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப் பத்திரங்கள் யாவும் அரக்கு முத்திரையிடப்பட்ட கடித உறையில் வைக்கப்பட்டு மாநகர ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம் என முகவரியிடப்பட்டு கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிக்கு முன்பு கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்படவேண்டும் அல்லது இதற்கென இவ்வலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடப்பட வேண்டும். கேள்விப் பத்திரத்தைக் கொண்டுள்ள கடித உறையின் இடது பக்க மூலையில் கேள்வியின் பெயர் குறிப்பிடப்படவேண்டும். மேலதிக விவரங்கள் அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

| வேலையின் பெயர் | மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புக் கட்டணம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திர கட்டணம் VAT உட்பட |
|---|---|---|
| 1. புதுமை மாதா கோயில் வீதி, குருநகர் | 2000.00 | 300.00 |
| 2. றெக்கிளமேசன், 2ஆம் குறுக்குத் தெரு | 2000.00 | 300.00 |
| 3. சென்.ஜேம்ஸ் கிழக்கு வீதி, குருநகர் | 2000.00 | 300.00 |
| 4. நீர்த்தாங்கி முதலாம் குறுக்குத் தெரு, குருநகர் | 2000.00 | 300.00 |
| 5. நீர்த்தாங்கி, 5ஆம் குறுக்குத் தெரு, குருநகர் | 2000.00 | 300.00 |
| 6. நெடுங்குளம் வீதி (பகுதி) | 2000.00 | 300.00 |
| 7. பாங்சால் வீதி (பகுதி) | 2000.00 | 300.00 |

மாநகரசபை,
யாழ்ப்பாணம். 01.08.2003 (சி-29275) (24)

மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

## சமையலுக்கு ஆள் தேவை

கொழும்பில் உள்ள உணவு விடுதி ஒன்றுக்கு யாழ்ப்பாண சமையலில் கைதேர்ந்த (சைவம், அசைவம்) 30 வயதிலிருந்து 55 வயது வரையான ஆண், பெண் சமையல்காரர் தேவை. தகுந்த சம்பளம் கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு - 021 - 222 3916.

முகாமையாளர்
யாழ்ப்பாணக் காரியாலயம்
13, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
செரண்டிப் விமான சேவை

(சி-29286) (24)

## மரண அறிவித்தல்

### பொன்னுத்துரை நல்லதுரை (அழகுதுரை)

கச்சேரியடியைப் பிறப்பிடமாகவும் ஈச்சமோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை நல்லதுரை அவர்கள் நேற்று முன்தினம் (02.08.2003) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை-சிவபாக்கியம் அவர்களின் சிரேஷ்ட புதல்வரும் புஷ்பராணி (கிளி) (யாழ்.போதனா வைத்தியசாலை) அவர்களின் அன்புக் கணவரும் றொபின்சன், உஷாநந்தினி, குயின்சன், சிவாநந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும் இராசலட்சுமி (தங்கம்), சந்திரகுமாரி, பாலேந்திரன் (பபி), செல்வகுமாரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் லக்ஷி, பிரபாஜினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் கிரிதீபனின் ஆசைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று (04.08.2003) திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெற்று தகனக்கிரியைக்காக துண்டி இந்து மயானத்திற்கு பூதவுடல் எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*6/3, விதானையார் வீதி,*
*ஈச்சமோட்டை.*
(21034) (32)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரன்.


சுடர் ஒளி விலை ரூ 16/= ஓகஸ்ட் 10-16



சிறந்த தலைவர் பிரபாகரனே என்பதை சுலபமாக அடையாளம் கண்ட எம்.ஜீ.ஆர்.

இடையில் விடைபெற்ற ஒப்பந்தங்களும் பிரஜா உரிமையற்ற நிலையில் மக்களும்

ஆட்சியாளரை அனுசரித்தால் ஜனநாயகம் அடக்கு முறைகளை எதிர்த்தால் பயங்கரவாதம்

பாதி வழி கடந்த புலிகளுக்கு மீதி வழி கடக்க வலியுண்டு

புலிகளுக்கு உரிமைப் பிரச்சினை அரசுக்கு கௌரவப் பிரச்சினை




கருணாநிதி-ஜெயலலிதா அயோத்தியிலும் இழுபறி

கமீலாவைக் கொன்றுவிட்டு தற்கொலை செய்ய எண்ணினார் டயானா

பிரிட்டிஷ் விஞ்ஞானியின் மரணம் பிளேயருக்கு விடுக்கும் சவால்

நாகரிகம் தெரியாத ஆள் நியமனத்தில் என்ன செய்வார்

உதயன்

## கதிர்காமரின் அச்சம்

"நாட்டின் பாதுகாப்பு நிலைமை நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டிருக்கின்றது. இலங்கையின் இறைமையையும் ஆள்புல ஒருமைப்பாட்டையும் இழக்க வைக்கும் செயற்பாடுகள் முனைப்படைந்துள்ளன.

"வடக்கில் இராணுவ முகாம்களை அகற்றும்படி புலிகள் கோருவது இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியேற்றவல்ல. மாறாக, அங்குள்ள இராணுவச் சமநிலையைத் தங்கள் இயக்கத்துக்குச் சார்பாக - சாதகமாக - மாற்றவே. பலாலி படைமுகாமின் எதிர்காலம் நூலிழையில் தொங்கிக்கொண்டிருக்கின்றது."

- இவ்வாறு முதலைக் கண்ணீர் வடித்திருப்பவர் வேறு யாருமல்லர். நமது முன்னாள் வெளிவிவகார அமைச்சரும், ஜனாதிபதி குமாரதுங்கவின் வெளிவிவகார ஆலோசகரும் 'பச்சை'த் தமிழருமான லக்ஷ்மன் கதிர்காமர்தான். தேர்தலில் எப்போதும் மக்களைச் சந்திக்காமலேயே மூன்று தடவைகள் எம்.பியாகத் தெரிவாகி, சிரேஷ்ட அமைச்சர் பதவியையும் வகித்தவர் அவர்.

சமாதான முயற்சிகளுக்காக நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டிருக்கும் யுத்த நிறுத்தத்தை - அமைதிச் சூழ்நிலையை - விடுதலைப் புலிகள் பயன்படுத்தி தங்களின் படை வலிமையைக் கட்டியெழுப்பி, இராணுவச் சமநிலையை தங்களுக்குச் சாதகமாக்க முயல்கின்றனர் என்பது கதிர்காமரின் குற்றச்சாட்டு.

இந்தக் குற்றச்சாட்டை இரண்டு பின்னணிகளில் ஆராயவேண்டும்.

ஒன்று - கதிர்காமர் கூறுவதில் உண்மை உள்ளதா? இராணுவச் சமநிலை விடயத்தில் அரசுத் தரப்பு எப்படிச் செயற்படுகின்றது? - இது ஓர் அம்சம்.

மற்றது - கதிர்காமர் முக்கிய அமைச்சுப் பொறுப்பை வகித்த சமயம், அவரது அரசும் புலிகளோடு பேச்சு நடத்தியது. அந்த அரசு இந்த விடயத்தில் எப்படி நடந்து கொண்டது? - இது மற்ற விடயம்.

தற்போதைய அரசைப் பொறுத்தவரை யுத்த நிறுத்தம் நடைமுறைக்கு வந்து - சமாதான முயற்சிகள் ஆரம்பித்து - ஒன்றரை வருடங்களாகி விட்ட பின்னரும் கூட, அது பாதுகாப்புச் செலவினத்தைக் குறைத்துக் கொள்ளவேயில்லை. பெரும் நிதியை கபளீகரம் செய்த - 2002இற்கு முந்திய கொடூர யுத்த காலத்தில் செலவிடப்பட்ட - பல்லாயிரக்கணக்கான கோடி ரூபா பாதுகாப்புச் செலவினத்தை - அது கொஞ்சமும் குறைத்துக் கொள்ளவில்லை.

மாறாக, படையினருக்குப் புதிது புதிதாகப் பயிற்சித் திட்டங்கள், படைக்கு ஆள்திரட்டல், இஸ்ரேலில் இருந்தும், அமெரிக்காவில் இருந்தும் ஆயுதத் தளபாடங்களை வாங்கிக் குவிக்கும் முயற்சிகள் என்று யுத்த முனைப்பில் தொடர்ந்து தீவிரம் காட்டி வருகின்றது அரசு.

ஒருபுறம் சமாதான முயற்சிகளுக்காகப் பேச்சு முகத்தைக் காட்டும் அரசுத்தரப்பு, மறுபுறத்தில் எதிர்காலத்தில் வெடிக்கக்கூடிய தீவிரப் போருக்கும் தன்னைத் தயார்ப்படுத்த யுத்த முகத்தையும் காட்டத் தவறவில்லை.

எனவே, பேச்சு என்று நம்பி ஏமாந்து போகாமல், எதிர்காலத்தில் யுத்தம் வெடித்தால் அதை எதிர்கொள்வதற்காகப் புலிகளும் இராணுவ ரீதியில் தம்மைத் தயார் செய்து வைத்துக்கொள்வதில் என்ன தப்பு?

அடுத்த விடயத்துக்கு வருவோம். 1994 ஓகஸ்டில் ஜனாதிபதி குமாரதுங்கவின் பொ.ஐ.மு. அரசு பதவியேற்ற போது லக்ஷ்மன் கதிர்காமர் முக்கிய அமைச்சரானார். அந்த அரசும் புலிகளோடு பத்து மாதம் பேச்சு நடத்தியது' சமாதான முயற்சிகளில் ஈடுபட்டது.

அந்தப் பேச்சு 1995 ஜூனில் முறிந்தது. அடுத்த ஐந்து மாதத்தினுள் - நூற்றியைம்பது நாள்களினுள் - யாழ். குடாநாட்டை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது சந்திரிகா அரசு.

பேச்சு முறிவடைந்த பின்னர்தான் பெரிய இராணுவத் தாக்குதலுக்கு அரசுத் துருப்புகள் தம்மைத் தயார்ப் படுத்தி அதன் பின்பே, அவற்றால் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற முடிந்ததா? அல்லது பேச்சு நடத்திய அமைதிச்சூழ்நிலை நிலவிய பத்து மாதங்களை தனக் குச் சாதகமாகப் பயன்படுத்தி, தன்னைத் தயார்ப் படுத்தி, அதன்மூலம் யாழ்ப்பாணத்தை அரசுத் துருப்பு கள் கைப்பற்றினவா?

கடந்த கால உண்மை என்னவென்பது உலகுக்குத் தெரியும்.

ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா, ஜனாதிபதி பிரேமதாஸ போன்றோரின் அரசுகளினால் பத்து வருடப் பகீரதப் பிரயத்தன முயற்சிகளால் கூட செய்யமுடியாததை - யாழ்.குடாநாட்டை அரசு கட்டுப்பாட்டில் கொண்டுவரும் திட்டத்தை - ஐந்து மாதத்தில் சந்திரிகா அரசினால் செய்ய முடிந்ததென்றால் அதற்குக் காரணம் அமைதி முயற்சி நடந்த பத்து மாத காலத்தில் இராணுவச் சமநிலையை தனக்குச் சாதகமாக அது மாற்றிக்கொண்டது தான்.

அந்த வேலையை புலிகள் இப்போது செய்து விடலாம் என அஞ்சுகிறார் கதிர்காமர். அவ்வளவே!

### இன்னலுற்ற தீவக மக்களுக்கு

# விடுதலைப்புலிகள் வழங்கிய பேருதவியே தியாகதீபம் திலீபன் மருத்துவமனை

### நெடுந்தீவு எழுச்சிப் பேரவை பாராட்டு

நெடுந்தீவு,ஓக.4

இன்னல்களை அனுபவித்த தீவக மக்களுக்கு விடுதலைப் புலிகள் வழங்கிய பேருதவியே தியாகதீபம் திலீபன் மருத்துவமனை.

- இவ்வாறு நெடுந்தீவுப் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை பாராட்டுத் தெரிவித்துள்ளது.

நெடுந்தீவில் இயங்கிவரும் தியாகதீபம் திலீபன் மருத்துவமனையின் ஓராண்டு சேவை நிறைவையொட்டி வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே இந்தப் பாராட்டு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

விடுதலைப் புலிகளின் வருகையின் பின் எம் தீவகம் விடுதலை பெற்றது. எம்மக்கள் சுதந்திரக்காற்றை சுவாசிக்கத் தொடங்கினர். இங்கு வந்த விடுதலைப் புலிகள் மக்களின் குறைகளைக் கேட்டறிந்து அதற்குப் பரிகாரம் தேடித்தந்தார்கள். அந்த வகையில் அமைந்ததே தியாகதீபம் திலீபன் மருத்துவமனையாகும்.

தீவகத்தில் உள்ள மாவட்ட வைத்தியசாலையானது ஒரு வைத்திய அதிகாரியும், ஓர் உதவி வைத்திய அதிகாரியும் கடமையாற்ற வேண்டிய வைத்தியசாலையாகும். தற்பொழுது ஓய்வுபெற்ற வைத்திய அதிகாரி ஒருவரே இங்கு கடமையாற்றி வருகின்றார். இவ் வைத்தியசாலையில் போதியளவு மருந்துப் பொருள்களும், மருத்துவ பரிசோதனை வசதிகளும் இல்லாமையால் தீவக மக்கள் பெரும் இன்னல்களை எதிர்நோக்கிக் கொண்டிருந்தனர். அந்தவேளையில் மக்களுக்கு மருத்துவ சேவை அளிக்கத் தீர்மானித்த விடுதலைப் புலிகள் 2002ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 4ஆம் திகதி நெடுந்தீவில் தியாகதீபம் திலீபன் மருத்துவமனையைத் திறந்து, மருத்துவ சேவையை ஆரம்பித்தனர்.

அன்றிலிருந்து இம் மருத்துவமனை இரவுபகலாக எம் தீவக மக்களுக்கு மகத்தான சேவையை ஆற்றிவருவதுடன் இதுவரை காலமும் 12ஆயிரத்து 627நோயாளருக்கு சிகிச்சை அளித்துள்ளது. 100இற்கும் அதிகமான கண்பார்வையற்றவர்களை பரிசோதித்து இலவச மூக்குக்கண்ணாடி வழங்கியதுடன் 50இற்கும் மேற்பட்டோருக்கு பற்சிகிச்சையும் அளிக்கப்பட்டது.

மருத்துவசேவையை ஆரம்பித்த காலத்திலிருந்து இரவுபகல் பாராது மக்களுக்கு சேவையாற்றிய, ஆற்றிக்கொண்டிருக்கின்ற மருத்துவப்போராளி பூவேந்தனையும் ஏனைய மருத்துவப் போராளிகளையும், மருத்துவசேவை ஊழியர்களையும் மனதார நன்றிப் பெருக்குடன் பாராட்டுகின்றோம்.

ஓராண்டை நிறைவு செய்யும் இந்நாளில் இம்மருத்துவமனை துறைசார்ந்த மருத்துவ நிபுணர்களையும் அழைத்து சேவையாற்றுவது குறிப்பிடத்தக்கது. இந்த மருத்துவசேவையினை தீவகத்தில் நடத்துவதற்கு சகலவிதமான உதவிகளையும் வழங்கிக் கொண்டிருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், குறிப்பாக எமது தீவின் மருத்துவக் குறைபாட்டை அறிந்துகொண்டு உடனடியாக வீரம் விளையும் விளைநிலமான வன்னியில் இருந்து எம் தீவகத்திற்கு மருத்துவக்குழுவினரை அனுப்பி தியாகதீபம் திலீபன் மருத்துவசேவையை ஆரம்பித்த எமது தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களுக்கு நெடுந்தீவு மக்கள சார்பில் நன்றியையும். மனமார்ந்த பாராட்டுக்களையும் தெரிவிக்கின்றோம்.

## குற்றச் செயல்களில் ஈடுபட்ட 35 படையினர் யாழ்.சிறையில்

யாழ்ப்பாணம்,ஓக.4

யாழ். குடாநாட்டில் குற்றச்செயல்களில் ஈடுபட்ட குற்றச்சாட்டுகளின் பேரில் சுமார் 35படையினர் யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

முகாம்களிலும் மற்றும் பொதுமக்கள் மீதும் குற்றச் செயல்கள் இழைத்ததாகக் கூறப்படும் இந்த இராணுவத்தினர் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றங்களின் உத்தரவுக்கு அமைய யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுடைய வழக்கு விசாரணைகள் பலாலியில் இராணுவ விசாரணைப் பகுதியிலும் மற்றும் யாழ்.நீதிமன்றிலும் நடைபெறுகின்றன.

இதேவேளை - கடந்த சில மாதங்களாக கொலை, விபச்சாரம, வல்லுறவு, களவு, கசிப்பு உற்பத்தி போன்ற குற்றச் செயல்களில் ஈடுபட்டதாகக்கூறி கைது செய்யப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-ரி)

### சண்டிலிப்பாயில் இயங்கும் சங்கங்கள்

## செயற்றிட்டங்களைச் சமர்ப்பிக்க அபிவிருத்தி அலுவலர் கோரிக்கை

சண்டிலிப்பாய்,ஓக.4

சண்டிலிப்பாய் வலி.தென்மேற்கு பிரதேச செயலகப் பிரிவில இயங்கிவரும் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மற்றும் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் இவ்வருடத்திற்கான செயல்திட்டங்களை தயாரித்துச் சமர்ப்பிக்கவேண்டும் என்று கோரப்பட்டுள்ளது. அண்மையில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற கிராம அபிவிருத்திச் சங்கங்களினதும் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களினதும் கலந்துரையாடல் கூட்டத்தில் இப்பிரிவு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் இவ்வாறு கோரினார். வருடத்திற்கான செயல்திட்டங்களைத் தயாரித்து-

இரண்டு வருட பதவிக்காலம் பூர்த்தியடைந்த கிராம அபிவிருத்திச் சங்கங்கள் வருடாந்தப் பொதுக்கூட்டத்தை நடத்தி புதிய நிர்வாக சபையைத் தெரிவு செய்ய வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். (ஒ-135)

## காலபோக நெற்செய்கை குறித்த கூட்டங்களை நடத்த அறிவுறுத்து

சண்டிலிப்பாய்,ஓக.4

யாழ்.மாவட்டத்திலுள்ள விவசாயச் சம்மேளனங்கள் எதிர்வரும் காலபோக நெற்செய்கையை முன்னிட்டு விதைநெல்லைப் பெறுவது தொடர்பாகவும், கட்டாக்காலி ஆடு, மாடுகளை தத்தமது பகுதிகளில் கட்டுப்படுத்துவது தொடர்பாகவும் நடவடிக்கை மேற்கொள்வதற்கு ஏதுவாகக் கலந்துரையாடல் கூட்டங்களை நடத்துமாறு யாழ்.கமநல சேவைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

விவசாயிகள் சம்மேளனங்கள் தத்தமது பிரிவுகளில் இம்மாத இறுதிக்குள் இத்தகைய கூட்டங்களை நடத்தி காலபோக நெற்செய்கையில் விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், விதை நெல் மற்றும் களைகொல்லிகளின் தேவைகள் ஆகியவற்றை மதிப்பீடு செய்து தத்தமது பிரிவு கமநல கேந்திர நிலையங்களுக்குத் தெரிவிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.(ஒ-135)

### நாளை

ஆடி 20
செவ்வாய்க்கிழமை
(05.08.2003)
திதி : அட்டமி
நள்ளிரவு 12.02 வரை
நட்சத்திரம: சுவாதி
பிறபகல் 4.12 வரை
சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை.
சுபநேரம்: 10.34 - 12.04
ராகுகாலம்: 3.04 - 4.34
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

ஆள் நுழையும் முன் அவனது ஒழுக்கமே முதலில் ஊர் போய்ச் சேருகிறது.

## கட்டாக்காலி நாய்களை அழிக்கும் மருந்து கிடைத்தது

சண்டிலிப்பாய்,ஓக.4

கட்டாக்காலி நாய்களை அழிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டு வரும் "ஸ்ரெச்சின்" என்ற இரசாயன மருந்து நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் யாழ்.சுகாதார திணைக்களத்திற்கு கொழும்பிலிருந்து அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இந்த நஞ்சு மருந்து யாழ்.சுகாதார திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்படாமையால் பிரதேச சபை பிரிவுகளில் கட்டாக்காலி நாய்களை அழிக்கும் பணி கடந்த பல மாதகாலமாக ஸ்தம்பிதமடைந்திருந்தது. இதனால், கட்டாக்காலி நாய்கள் பெருக்கமடைந்து பொதுமக்களுக்கு பெரும் தொல்லைகளை ஏற்படுத்தி வந்தன கடந்த வாரம் யாழ்.சுகாதார திணைக்களத்தின் மாவட்ட மருந்துக் களஞ்சியத்திற்கு கொழும்பிலிருந்து அனுப்பி வைக்கப்பட்ட இந்த மருந்து யாழ். மாவட்டத்திலுள்ள சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு அலுவலகங்களுக்கு பங்கீடு செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளதாகவும் - கட்டாக்காலி நாய்களை பிடித்து அழிக்கும் பணி கிராம ரீதியாக விரைவில் ஆரம்பமாக இருப்பதாகவும் - அறிய முடிகிறது. (ஒ-135)

## இந்து கலாசார அமைச்சில் ஆங்கில மோக அதிகாரிகள்

வலி.வடக்கு,ஓக.4

இந்து கலாசார அமைச்சில் இருந்து வடக்கு - கிழக்கு மாகாண செயலகங்கள் மற்றும் அரச திணைக்களங்களுக்கு அனுப்பப்படும் கடிதங்கள் ஆங்கில மொழியில் அனுப்பப்படுவதாகக் கூறப்படுகிறது.

வடக்கு - கிழக்கில் தமிழ் நிர்வாக மொழியாக இருக்கும் என்று அரசமைப்பு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில், தமிழர் ஒருவர் அமைச்சராக உள்ள இந்து கலாசார அமைச்சு தமிழ்ப் பகுதிகளுக்கு ஆங்கிலமொழியில் கடிதம் அனுப்புவது குறித்து அதிகாரிகள் மட்டத்தில் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

இதுதொடர்பாக இந்து கலாசார அமைச்சர் தனது செயலாளர்கள் ஆங்கிலத்தில் கடிதம் அனுப்புவதையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் அந்த அதிகாரிகள் எதிர்பார்ப்பு வெளியிட்டுள்ளனர்.

மேற்படி அமைச்சிலுள்ள அதிகாரிகளே கடிதங்களை ஆங் கிலத்தில் அனுப்பி வைப்பதாகவும் -

பெரும்பாலும் மீள்நியமனம் பெற்ற தமிழ் அதிகாரிகளே இவ்வகையான ஆங்கிலமொழி மோகம் கொண்டிருப்பதாகவும் - கூறப்படுகிறது. (ஒ-86)

## பண்டத்தரிப்பு ஆஸ்பத்திரி குறித்து பணிப்பாளருடன் பேச்சுவார்த்தை

சண்டிலிப்பாய்,ஓக.4

பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலை அபிவிருத்திச் சபை யாழ்.சுகாதார சேவை பிரதி மாகாணப் பணிப்பாளர் டாக்டர் கே.ரி.சிவபாதத்தை-கடந்த வியாழக்கிழமையன்று பிற்பகல் நேரில் சந்தித்து வைத்தியசாலை அபிவிருத்தி தொடர்பாகக் கலந்துரையாடியது.

இந்த வைத்தியசாலைக்கு நிரந்தரப் பொறுப்பதிகாரி ஒருவரை நியமிக்கவேண்டும் என்றும், வைத்தியசாலையில் கட்டி முடிக்கப்பட்டு கடந்த இருவருடகாலமாக திறக்கப்படாதிருக்கும் வார்ட்டுகளையும், பிரசவ விடுதியையும் திறப்பதற்கு ஆவண செய்யவேண்டும் என்றும், வைத்தியசாலைக்கு மின் விநியோகம செய்து தரப்படவேண்டும் என்றும் அபிவிருத்திச் சபையினர் பிரதி மாகாணப் பணிப்பாளரிடம் இச்சந்திப்பின் போது வேண்டுகோள் விடுத்தனர்.

எதிர்வரும் ஜனவரி மாதத்திலிருந்து வைத்தியசாலைக்கு நிரந்தர பொறுப்பதிகாரி ஒருவரை நியமிக்க உள்ளதாகவும்- மற்றைய கோரிக்கைகளை நிறைவேற்ற உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் - பிரதி மாகாண பணிப்பாளர் அபிவிருத்திச் சபையினரிடம் தெரிவித்துள்ளதாக சபையின் தலைவர் ச.செல்வரத்தினம் தெரிவித்தார். (ஒ-130)

## இதோ!

இளமைத்துடிப்பு மிக்க முழுமையான, திருப்திகரமான பாலியல் இன்பத்தைப் பெற்று, உங்கள் உடலில் ஜீவசக்தியை பெருகச்செய்து, பூரிக்கச் செய்வதற்கும், விரயமாகும் உங்கள் சக்தியை விரைவில் புனரமைப்பதற்கும், நரம்புத்தளர்ச்சி, மூட்டுவலி, கடுப்பு நோவு ஆகியவற்றை நீக்கி உடலுக்கு உயிர் துடிப்பையும் வாலிபத்தின் வனப்பையும் பெறுவதற்கும் பாவியுங்கள்!

100% இளமையையும் வலிமையையும் தரும்.

**சித்தாரா முடக்கத்தான் அமுக்கரா சிரப்**

யாழ்.குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
**SITHARA PRODUCTS**
Puttalam Road,
Chillaw.
(Reg.No:-6382) AR/PR/No:228

யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:-
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.: 222 - 2567
(சி-29244) (24-13-16)



## இந்திய ஜோதிடர் யாழ். விஜயம்

ஸ்ரீ சோட்டா நிக்கரை பகவதி அம்மன் அருள்பெற்று ஸ்ரீ வெட்டுடைய காளி அம்மன் வாக்குப்பெற்ற இந்தியப் பரம்பரை ஜோதிடர் யாழ் வருகை தந்துள்ளார். கைரேகை, ஜாதகம், எண்கணிதம், மகப்பேறு, குடும்பப் பிரச்சினையா? கல்வி, வெளிநாடு செல்லத்தடையா? தொழிற்பிரச்சினையா? காதல் பிரச்சினையா? திருமணப் பிரச்சினையா? தீராத நோயா? எந்தவிதமான பிரச்சினைகளுக்கும் தக்க பரிகாரம் மூலம் தீர்வு காணலாம்.

ஒரு முறை விஜயம் செய்து பாருங்கள்!
இரண்டாவது தடவையாக விஜயம் செய்துள்ளார்.

**மணிசாமி P.T.R ஈஸ்வரி அம்மா**

யாழ். உல்லாசப் பயணிகள் விடுதி. (பழைய லிங்கம் கூல்பார் அருகில்)
இல. 54, மனிக்கூட்டு வீதி. யாழ்ப்பாணம் (வெலிங்டன் சந்தி அருகில். பெருமாள் கோயிலடி.)
பார்வையிடும் நேரம் : காலை 9.00 மணிமுதல் மாலை 4.00 மணிவரை.
(24-13-16) (21025)





பொன்னாலை ஸ்ரீ வரதராஜப்பெருமாள் தேவஸ்தானம்
2003 சுபானு வருஷ ஆவணி மாத திவ்விய
**மஹோற்சவ விஞ்ஞாபனம்**

**விஷேட உற்சவ தினங்கள்**

கொடியேற்றம் : ஆடி மாதம் 19ஆம் நாள் (04-08-2003) திங்கட்கிழமை முற்பகல் 11 மணி.
சப்பரத் திருவிழா : ஆடிமாதம் 23ஆம் நாள் (08-08-2003) வெள்ளிக்கிழமை மாலை 7 மணி.
பகல் வரலட்சுமி விரதம், நூல் கட்டுதல்
மஞ்சத் திருவிழாவும், புன்னைவாகன உற்சவமும்: 13-08-2003 புதன்கிழமை காலை.
அனந்தசயன திருவிழா : 16-08-2003 சனிக்கிழமை
வேட்டைத் திருவிழா : ஆவணி மாதம் 2ஆம் நாள் (19-08-2003) செவ்வாய்க்கிழமை இரவு 8மணி.
தேர்த்திருவிழா: ஆவணி மாதம் 3ஆம் நாள் (20-08-2003) புதன்கிழமை
முற்பகல் 10 மணிக்கு வசந்தமண்டபப் பூஜை
முற்பகல் 11.30 மணிக்கு தேரில் எழுந்தருளல்
பகல் 1.00மணிக்கு உறியடி உற்சவம்
இரவு 12 மணிக்கு கிருஷ்ணஜெயந்தி.
தீர்த்தத் திருவிழா : ஆவணிமாதம் 4ஆம் நாள் (21-08-2003)
வியாழக்கிழமை காலை 9 மணிக்கு திருவடிநிலைக்கு புறப்படல்.
முற்பகல் 11மணிக்கு தீர்த்தோற்சவம், மாலை 6மணிக்கு கொடியிறக்கல்.
திருக்கல்யாணம் : 22-08-2003 வெள்ளிக்கிழமை.
★ மஹோற்சவ பிரதமகுரு : சிவாகம கிரியாசிரோமணி, கிரியாபானு, கிரியாகலாபமணி
சிவப்பிரம்மஸ்ரீ க.ச.சோமாஸ்கந்தக் குருக்கள்.
ஆஞ்சநேயர் அபிஷேகம், பொங்கல், வீதியுலா
14-09-2003 ஞாயிறு நடைபெறும்.
★ தினமும் மாலை 7 மணி முதல் 8 மணிவரை இரா.செல்வவடிவேலின் 'இராமாயணம்' என்ற தலைப்பிலான சொற்பொழிவு இடம்பெறும்.

(20968) (24-13-16) - தேவஸ்தான பரிபாலன சபை.


## மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு வீடுகள்

வலி.வடக்கு,ஓக.4

வன்னியில் இருந்துவந்து மீள் குடியமர்ந்த வறுமைக்கோட்டின்கீழ் உள்ள 24 குடும்பங்களுக்கு கோப்பாய் மத்தி கிராம அலுவலர் பிரிவில் தற்காலிக வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தால் அமைக்கப்பட்ட இவ்வீடுகள் தலா 15 ஆயிரம் ரூபா செலவில் கட்டப்பட்டுள்ளன.

கோப்பாய் மத்தி சூசையப்பர் ஆலயத்திற்கு அருகில் இத்தற்காலிக வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன.

(ஓ-86)

## முதுமாணி கற்கை நெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,ஓக.4

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் வர்த்தக முகாமைத்துவ முதுமாணி மற்றும் பொது நிர்வாக முதுமாணி ஆகிய கற்கைநெறிகளுக்கான விண்ணப்பப்படிவங்களை யாழ். பிராந்திய நிலையத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பப்படிவத்தைப் பெற விரும்புவோர் 500 ரூபா செலுத்தி அதனைப் பெற்றுக்கொள்ளலாம் என்று பிராந்திய இயக்குநர் ச.ஆ. ஞானேந்திரன் தெரிவித்துள்ளார்.

(ஓ-10)

## உள்ளூராட்சி வார கலை நிகழ்வு

வட்டுக்கோட்டை,ஓக.4

வலி.மேற்கு பிரதேச சபையும் சன சமூக நிலையங்களின் சமாசமும் இணைந்து நடத்தும் உள்ளூராட்சி வார விழாவும் கலைநிகழ்வும் நாளை செவ்வாய்க்கிழமை பி.ப.2.00 மணிக்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஒட்லி மண்டபத்தில் பிரதேச சபை செயலாளர் திருமதி சா.சிவானந்தராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி.கிருஸ்ணசாமி கலந்துகொள்கிறார். (ஓ-161)








உலகப் புகழ் பெற்ற L.G
குளிர்சாதனப் பெட்டிகள்
Abans நிறுவனத்தின்
உத்தரவாதத்துடன்
இலவச விநியோக சேவையில் பெற்றிட

LG
**JAFFNA ELECTRICALS**
Authorised Dealer For
**Abans**
141, POWER HOUSE ROAD, JAFFNA TEL: 021-222-5766
(C-29206)



## தேவை

மருத்துவமனையில் கடமையாற்றுவதற்கு பெண் தேவை. வயதுக்கட்டுப்பாடு இல்லை. நற்பண்புள்ளவர்கள் விரும்பத்தக்கது.

தங்கும் இடவசதியுண்டு.
விள. இல. 1974
C/o உதயன்
(21023)




**தென்மராட்சியில் RASAMS**

**இராசம்ஸ் மின்சார உபகரணங்கள் விற்பனை நிலையம்**

✽ மக்களின் வசிப்பிடங்கள் ✽ தொழிற்சாலைகள்
✽ பொது ஸ்தாபனங்கள் ✽ அரச அலுவலகங்கள் ✽ ஆலயங்கள் என்பவற்றுக்கான

**மின் இணைப்புக்கேற்ற மின் உபகரணங்கள்**

- ✦ அலங்கார மின் விளக்குகள்
- ✦ மின் விசிறிகள் FAN
- ✦ மின் சீராக்கிகள் ESTABILISOR
- ✦ மின்சார தண்ணீர் பம்புகள் ELECTRIC PUMP
- ✦ அன்ரனா வகைகள் ANTANA VHF/ UHF
- ✦ தொலைபேசிகள் TELEPHONES
- ✦ பற்றறி வகைகள் EXIDE BATTARIES
- ✦ பி.வி.சி. குழாய்கள் P.V.C. PIPES




முதலியவற்றை ஒரே இடத்தில் நிதான விலையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

☞ ஒரு முனை SINGLE PHASE, மும்முனை THREE PHASE இணைப்புகள் யாவும் - அரச நிறுவனங்களில் கடமையாற்றிய தகுதிவாய்ந்த தொழில்நுட்பவியலாளர்களைக் கொண்டு மின்னியல் சட்ட திட்டத்துக்கு அமைவாகச் செய்துகொடுப்பதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும்.

இராசம்ஸ் RASAMS
மின்சார உபகரணங்கள் விற்பனையாளர்
135, கண்டி வீதி, சாவகச்சேரி.
☎ 021- 222 3017, 021 - 222 6041
(சி-29197)(24-13-16)



## வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர், ஆஸ்துமா, வாதநோய்கள், வலிப்பு நோய், பீனிசம், தலையிடி, தலைகால் அவியல், சருமநோய்கள், மாதவிடாய்க்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, குழந்தை வைத்தியம், வீரியக்குறைவு, மூலவியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபல்யமானவர்.

சகல வியாதிகளையும் குணப்படுத்துபவர்:

வேலணை வைத்திய கலாநிதி
**சி.இராசரத்தினம்**
121, 2ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண்.: 2459
(21015)



## மாபெரும் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும்

அநேக வாடிக்கையாளரின் வேண்டுகோளுக்கு இணங்க இம்மாதம் 15ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

உங்களுக்குத் தேவையான சகலவிதமான புத்தகங்களும் ஒரே கூரையின்கீழ் பெற்றுக்கொள்ள 'புத்தகக் கடல்'. 10% - 50% கழிவு வழங்கப்படும். ஒரு சில மருத்துவ, பொறியியல், கணனி புத்தகங்கள், ஆங்கிலம் கற்றுக்கொள்ள பாடசாலை மாணவர்களுக்கான ஒரு சில புத்தகங்களும், உபகரணங்களும் ரூபா 10 - ரூபா 100 வரை பெற்றுககொள்ளலாம். இவை தவிர, பாடசாலை அலுவலக உபகரணங்களும் பாடசாலை அழிபொருள்கள், மூலப்பொருள்களும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். பாடசாலைகளுக்கு இலவச விநியோகம். உங்கள் தேவை எதுவானாலும் பூர்த்திசெய்ய தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:-

எல்லா விதமான கடன் காட்டும் (Credit Card) ஏற்றுக்கொள்ளப்படும்.

**ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்**

இல. 212, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். T.P.021-222 5542
(C/29279) (24-13-16)

# வாழ்வையும் போராட்டத்தையும் காட்சிப்படுத்தும் 'உலைக்களம்'

## வெளியீட்டு விழாவில் இளம்பரிதி



யாழ்ப்பாணம்,ஓக.4

எமது இனத்தின் வாழ்வையும் போராட்டத்தையும் காட்சிப்படுத்துவதாகவே கவிஞர் புதுவை இரத்தினதுரையின் 'வியாசனின் உலைக்களம்' நூல் அமைந்துள்ளது.

- இவ்வாறு கடந்த வெள்ளிக்கிழமை யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற உலைக்களம் நூல் வெளியீட்டு விழாவில் தலைமையுரையாற்றிய யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

எதிரி, எம்மைத் துண்டம் துண்டமாக்கி சிதைக்க முடிவு கட்டிய பொழுது - அதற்கான வியூகங்களை வகுத்தபொழுது - வன்னியிலே சமகால நிலைமைகள் அனைத்தையும் புதுவை அண்ணா அவர்கள் மக்களுக்கு அப்படியே காட்டுவார். அதன் மூலம் சமூக, பொருளாதார அரசியல் விழிப்புணர்ச்சி என்பது எமது மக்களிடம் ஏற்பட்டது. துண்டு துண்டாக ஒவ்வோர் இதழிலும் வந்த உலைக்களம் இன்று எவ்வாறு தொகுப்பாக வெளிவருகின்றதோ அதுபோல் எமது தாயகத்தின் எல்லா மக்களுமே ஒன்று கூடி எமது இறுதி இலக்குக்காகக காத்திருக்கின்றோம். இவ்வேளையில் தான் கலைஞர்கள், அறிஞர்கள், உணர்வுமிக்க எம்மக்கள் முன்னிலையில இந்த நூல் வெளியிட்டு வைக்கப்படுகின்றது. இது எமது இனத்தின் வரலாற்றை ஆவணப்படுத்துவதாகவும், எமது மக்களின் வாழ்வையும் போராட்டத்தையும் காட்சிப்படுத்துவதாகவும் உள்ளது.

புதுவை இரத்தினதுரை ஒரு மக்கள் கலைஞனாகவும், 'உலைக்களம்' என்ற இந்நூல் ஒரு மக்கள் படைப்பிலக்கியமாகவும் எங்கள் முன் விரிந்து நிற்பதைக் காணமுடிகின்றது. எமது மக்களின் வாழ்வு மேன்மையையும், மகிழ்ச்சியையுமே அது ஒவ்வோர் இடத்திலும் சித்திரித்து நிற்கின்றது.

போர்நிறுத்தம், சமாதானம், பேச்சுவார்த்தை என நிகழ்கால அரசியல் ஓட்டங்களையும், விடுதலை வேண்டி நிற்கும் இனத்தின் உணர்வுகளையும், அரசியல் அர்த்தங்களுடன் புதுவை அவர்கள் தனது நூலில் பதிவு செயதுள்ளார். அவரது கவிதைகளைப் படிக்கும்போது எமக்குள்ளே ஓர் உந்து சக்தி உண்டாவதை நாம் அனைவரும உணர்ந்திருக்கிறோம். புதுவை அண்ணா ஒரு மாற்றத்துக்கான ஒரு சக்தியாக மாறுகின்றார்.

கவிதை உலகில் போர்க்கால இலக்கியத்திற்கு இலக்கணம் வகுத்துக்கொடுத்த பெருமை அவரையே சாரும் என எமது தேசியத் தலைவா கூறியிருந்தார்.

இவ்வாறு தலைவரால், தளபதிகளால், மக்களால், அறிஞர்களால் குறித்துரைக்கப்படுகின்ற ஒரு கலைஞராக புதுவை விளங்குகின்றார். அவரது ஆக்கங்கள் படைப்புக்கள் என்பன மக்களால் நேசிக்கப்படுபவையாக உள்ளன. எமது போராட்ட வாழவின், விடுதலை இயக்கத்தின் வரலாற்று ஆவணமாகவும் காலத்தின் விம்பமாகவும் இந்த உலைக்களம் அமைந்துள்ளது - என்றார் இளம்பரிதி.

வெளியீட்டு விழாவின் ஆரம்பத்தில் பொதுச்சுடரினை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன். தியாகம் ஏற்றினார். தமிழீழ தேசியக் கொடியினை தமிழீழ விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் கி.பாப்பா ஏற்றினார்.

யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி தலைமையில் விழா ஆரம்பமானது. வரவேற்புரையை போராளி அன்புமாறன் நிகழ்த்தினார்.

இதனைத் தொடர்ந்து சிறப்புரையை விடுதலைப் புலிகளின் மூத்த பர்முகர் கா.வே.பாலகுமாரனும், வெளியீட்டுரையை 'வெளிச்சம்' ஆசிரியர் சி.கருணாகரனும் நிகழ்த்தினார்கள். விடுதலைப் புலிகளின் அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் நூலை வெளியிட்டு வைத்தார். நூலின் முதற் பிரதியை சிவதமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியும், சிறப்புப் பிரதிகளை திருமறைக் கலாமன்ற இயக்குநர் அருட்திரு.நீ.மரியசேவியர் அடிகள், மாவீரர் அர்ச்சுனாவின் தந்தையார் சதாசிவம் ஆகியோர் பெறுக்கொண்டனர். ஏனைய பிரதிகளை யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸ், விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியற்துறை மகளிர் துணைப் பொறுப்பாளர் தமிழ்விழி ஆகியோர் வழங்கினார்கள்.

நூலின் மதிப்பீட்டுரைகளை பேராசிரியர் அ.சண்முகதாஸ், மு.திருநாவுகரசு, எழுத்தாளர் ஐ.சாந்தன் ஆகியோா வழங்கினார்கள். பதிலுரையை நூலாசிரியர் கவிஞர் புதுவை இரத்தினதுரை வழங்கினார்.

இவ்வெளியீட்டு விழாவில் தமிழர் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ், யாழ்.மேலதிக அரச அதிபர் திருமதி ப.திலகநாயகம்போல், சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழுவின் பிரதிநிதி அருட்திரு. ஏ.ஜ.பேர்னாட் அடிகளார், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீசோமசுந்தர ஞானசம்பந்த பராமாச்சார்ய சுவாமிகள ஆகியோர் உட்பட எழுத்தாளர்கள், அறிஞர்கள், விரிவுரையாளர்கள், கல்வி அதிகாரிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பெருந் தொகையானோர் கலந்துகொண்டனர்.

(ஐ-8)

## குடும்பஸ்தர் கொலை; மைத்துனர் விளக்கமறியலில்!

அரியாலைப் பகுதியில் கடந்த வெள்ளியன்று இளம் குடும்பஸ்தர் ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக அவரது மைத்துனரை விளக்கமறியலில் வைக்கும்படி யாழ். நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா உத்தரவிட்டுள்ளார்.

அரியாலை, ஆட்காட்டி வீதிப் பகுதியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான சுப்பிரமணியம் சுரேஸ்கரன் (வயது 28) இரவு நேரம் சிலர் வீடு புகுந்து மூர்க்கமாகத் தாக்கியதில் உயிரிழந்தார்.

அவருக்கும் அவரது மைத்துனருக்கும் இடையில் நிலவிய முரண்பாடுகளின் எதிரொலியாக இந்தக் கொலை இடம்பெற்றுள்ளதாகச் சந்தேகிக்கப்படுகிறது.

இக்கொலை தொடர்பாக அவரின் மைத்துனரையும், மைத்துனரின் தாயையும் பொலீஸார் கைதுசெய்து நேற்று யாழ். நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா முன் ஆஜர்செய்தனர். தாயை பிணையில் அனுமதித்த நீதிவான் இறந்தவரின் மைத்துனரை எதிர்வரும் 15ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கும்படி உத்தரவிட்டார்.

(ம-3-10-30-86-5)

## எம்.பிக்கள் 200 பேரிடம் சட்டவிரோத துப்பாக்கிகள்

கொழும்பு,ஓக.4

நாடாளுமன்ற உறுப்பினர்களில் 200 பேர் அனுமதிப்பத்திரம் இன்றி கைத்துப்பாக்கிகள் வைத்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பொலீஸ்மா அதிபர் ரி.ஈ.ஆனந்தராஜாவின் உத்தரவுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் இந்த விடயம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் வாகனத்தில் இருந்து அனுமதிப்பத்திரம் இன்றி துப்பாக்கி ஒன்றைப் பொலீஸார் கண்டுபிடித்தனர்.

இதைத் தொடர்ந்து சபாநாயகர் மைக்கல் பெரேரா, நாடாளுமன்ற உறுப்பினர்களின் சொந்தப் பாவிப்பில் உள்ள துப்பாக்கிகள் அனுமதி பெறப்பட்டவையா என்பது குறித்து ஆராயுமாறு பொலீஸ்மா அதிபருக்கு பணிப்புரை விடுத்திருந்தார்.

அதையடுத்தே விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

நாடாளுமன்றின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 225 என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம-3)

## ஜப்பானிய அரசசார்பற்ற நிறுவன பிரதிநிதிகள் வன்னிக்கு விஜயம்

கிளிநொச்சி,ஓக.4

ஜப்பானிய அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் அடங்கிய குழு ஒன்று இன்று திங்கட்கிழமை வன்னிக்கு வருகைதர இருக்கின்றது.

மூன்று தினங்கள் வன்னியில் தங்கியிருக்கும் இக்குழுவினர் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினருடன் பேச்சுக்களை நடத்துவர். கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய பகுதிகளுக்கும் குழுவினர் செல்வர்.

விடுதலைப் புலிகளின் அரசியல் துறை உறுப்பினர்களை எதிர்வரும் 5ஆம் திகதி சந்திக்கும் இக்குழுவினர் புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்து ஆராய்வர்.

ஏழு அரசசார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகள் இக்குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

(ம-3)

## கல்கிசையில் கொல்லப்பட்ட ரகுபதி ஈ.பி.டி.பியின் உறுப்பினர் அல்லராம்!

யாழ்ப்பாணம்.ஓக.4

கடந்த மார்ச் மாதம் 18ஆம் திகதி கல்கிசையில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்ட ரகுபதி என்ற நபர் ஈ.பி.டி.பியின் உறுப்பினர் அல்லர் என்று அக்கட்சி ஓர் அறிக்கையில் தெரிவித்திருக்கிறது.

கொலையுண்டவர் தொடர்பாக பொலீஸ்மா அதிபரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் உண்மைக்குப் புறம்பானவை என்று அந்த அறிக்கையில் ஈ.பி.டி.பி. தெரிவித்திருக்கிறது.

### அக்கட்சி விளக்கம்

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கடந்த மார்ச் 18ஆம் திகதியன்று கல்கிசையில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்ட ரகுபதி என்பவர் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி(ஈ.பி.டி.பி.) உறுப்பினராக ஒருபோதும் செயற்பட்டவா அல்லர். ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி உறுப்பினர்கள் இராணுவத் தரப்பின் உளவாளிகளாகச் செயற்படுபவர்களும் அல்லர்.

தெஹிவளை பொலீஸ் நிலையப் புலனாய்வுப் பிரிவு பொறுப்பதிகாரியான சுனில் தாப்ரூவின் கொலை தொடர்பாக விசாரணை அறிக்கையில் பொலீஸ்மா அதிபர் ரகுபதியை ஈ.பி.டி.பி. உறுப்பினர் என்ற வகையிலும், இராணுவ உளவாளி என்ற வகையிலும் சித்தரித்திருப்பதாக பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன. ஆனால் இத்தகவல்கள் அடிப்படை ஆதாரங்கள் எதுவுமற்றவையாகும்.

கொலையுண்ட ரகுபதி என்பவர் புளொட் அமைப்பின் உறுப்பினராக இருந்ததுடன், கொல்லப்பட்ட வேளையில் தனது குடும்பக் கடமைகளில் தான் ஈடுபட்டிருந்தவர் என்பதும், தனது பிள்ளையின் முன்பாக கோரமாகக் கொல்லப்பட்டார் என்பதும், மனங்கொள்ளவேண்டியவையாகும்.

மேலும் காரணம் எதுவாக இருந்தாலும் எவரும், எவரையும் கொலை செய்து விடுவதை நாகரிக சமூகம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப் போவது இல்லை. கொலையுண்டவர்களுக்கு இறுதி அஞ்சலி செலுத்துவது என்பது ஒரு மனிதநேய செயற்பாடாகும். உயிரிழந்தவரின் குடும்பத்துக்கு அனுதாபம் தெரிவிப்பதும் ஆறுதல் கூறுவதும் சாதாரண மனிதப்பண்பு. இவை ஒருபுறம் இருக்க கொலையுண்ட ரகுபதியின் இறுதிச்சடங்குகளில் செயலாளர் நாயகம் தோழர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்கள் மாறுவேடத்தில் சென்றதாகக் கூறப்பட்டிருப்பது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானதாகும்.

- இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## சட்டவிரோதமாக ஐரோப்பாவில் குடியேற தளமாகிறது இலங்கை!

கொழும்பு,ஓக.4

தெற்காசிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் ஐரோப்பிய நாடுகளில் சட்டவிரோதமாகக் குடியேறுவதற்கு தளமாக இலங்கை உள்ளதாக பி.பி.ஸி. கூறுகின்றது.

இதுதொடர்பாக பி.பி.ஸி. மேலும் தெரிவித்ததாவது:-

ஐரோப்பிய நாடுகளில் வேலை செய்து பணம் சம்பாதிக்கும் நோக்குடன் சட்டவிரோதமாகச் செல்ல விரும்புபவர்களை பெருந்தொகையான பணத்தைப் பெற்றுக்கொண்டு அவாகளை ஐரோப்பாவுக்கு கடத்தும் வியாபாரத்துக்கு இலங்கை இப்போது ஓர் இடைத்தளமாக அமைந்துவிட்டது.

சென்ற மாதத்தில் மட்டும் இலங்கையர், பாகிஸ்தானியர், பங்களாதேஷைச் சேர்ந்தவர்கள் என சுமார் எழுநூறு பேர் இலங்கையில் கைது செய்யப்பட்டுள்ளனர். பல ஆண்டுகளாக இலங்கையைச் சேர்ந்தவர்கள் மீன்பிடி படகுகள் மூலம் எகிப்திற்குச் சென்று அங்கிருந்து இத்தாலிக்குச் சென்று வந்தனர். இது ஆபத்தான பயணம் - இப்போது இலங்கையின் சுற்றுலாப் பயணத்தை ஊக்குவிக்கும நோக்குடன் தெற்காசிய நாடுகளில் இருந்து இலங்கைக்கு வருபவாகளுக்கு "விஸா" கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளது. இதன் விளைவாக ஐரோப்பாவிற்கு சட்டவிரோதமாக செல்பவர்களுக்கு இலங்கை ஓர் இடைத்தங்கல தளமாக அமைந்து விட்டது.

கொழும்பு புறநகர்ப் பகுதியில் உள்ள இடங்களில் வைத்து சட்டவிரோதமாக வெளிநாடுகளுக்குச் செல்ல முயற்சிப்பவர்கள் எனும் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்ட எழுநூறு இளைஞர்கள் பொலீஸ நிலையங்களில் காணப்படுகின்றனர்.

பாகிஸ்தானைச் சேர்ந்த ஒருவர் இதுதொடர்பாக தெரிவிக்கும்போது - "காலை நான்கு மணிக்கு நான் தங்கியிருந்த அறைக்கதவை எவரோ தட்டினார்கள். - கதவைத் திறந்தபோது பொலீஸார் நின்றுகொண்டிருந்தனர். இலங்கைக்கு வருவதற்கான நுழைவு அனுமதி இருக்கின்றதா? என்பதனை சோதிக்கவேண்டும் என அவர்கள் கூறினார்கள். என்னுடன் வியாபார நோக்கமாக பலரும் வந்திருந்தனர். அவர்களிடமும் நுழைவு அனுமதிகள் இருந்தன. வந்த பொலீஸார் தாம் சோதனை செய்வது மட டுந்தான் எனக் கூறினர். பின்னர் பொலீஸ் நிலையத்திற்கு நாம் அழைத்துச் செல்லப்பட்டோம். அங்கே எம்மைப்பார்த்து இத்தாலிக்கு போக விரும்புகிறீர்களா? எனக் கேட்டார்கள். நான் சொன்னேன் என்னிடம் என்னுடைய நாட்டிற்கு செல்வதற்கான அனுமதிச்சீட்டு இருக்கின்றது. நான் எப்படி இத்தாலிக்குப் போகமுடியும் எனத் தெரிவித்துவிட்டேன்". இவ்வாறு அவர் கூறினார்.

இவரைப்போலவே கைது செய்யப்பட்ட பெரும்பாலான இளைஞர்கள் தாங்கள் வர்த்தகர்கள் அல்லது சுற்றுலாப்பயணிகள் என்றே கூறுகின்றனர். ஆனால், இவர்களில் எவருமே தமது குடும்பங்களுடன் வரவில்லை இவர்கள் தங்கி இருந்த ஹோட்டலில் பொலீஸார் திடீர் சோதனை நடத்தியபோது அங்கிருந்து இந்தியர் ஒருவர் ஜன்னல் வழியாக குதித்து ஓடியுள்ளார். பொலீஸார் இன்னொருவரை விசாரணை செய்யும்போது அவர் தெரிவித்ததாவது, தான் பாகிஸ்தானில் இருந்து வந்ததாகவும் தனது கடவுச்சீட்டை தனது நண்பர்களிடம் கொடுத்துவிட்டதாகவும் எனவே, தன்னிடம் கடவுச்சீட்டு இல்லை என்றும் கூறியுள்ளார். இறுதியில் கிரேக்கத்திற்குச் செல்வதற்காக நாலாயிரம் அமெரிக்க டொலர்கள், தான் கொடுத்ததாக அவர் ஒப்புக்கொண்டார்.

ஆள்களை வெளிநாடுகளிற்கு சட்டவிரோதமாக கொண்டு செல்பவர்களுக்கு இலங்கை ஒரு முக்கிய இடைத்தங்கல் தளமாக அமைந்துவிட்டது என்கின்றனர் பொலீஸார்.

பிடிபட்ட நபர்களின் சொந்த நாடுகளான இந்தியா, பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் ஆகியவற்றில் கடலோரப் பகுதிப் பாதுகாப்புகள் கடுமையாக உள்ளன. ஆனால், இலங்கையில் அவ்வாறு இல்லை. அந்த நாடுகளில் இருக்கும் ரோந்து நடவடிக்கைகளைப்போன்று இலங்கையில் எதுவும் இல்லை. ஆகவே, வெளிநாடுகளிற்கு சட்டவிரோதமாக செல்பவர்கள் இலங்கையில் இருந்து நழுவிச் செல்வது மிகவும் சுலபமாக உள்ளது. எனப் பொலீஸார் தெரிவித்தனர்.

(ஒ-6)




குப்பிழான் ஐ.சண்முகனின் 'அறிமுகங்கள் விமர்சனங்கள் குறிப்புக்கள்' நூல் வெளியீடு கட்டைவேலி - நெல்லியடி ப.நோ.கூ. சங்கத்தின் கலாசாரக் கூட்டுறவுப் பெருமன்ற ஆதரவில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் இடம்பெற்றபோது நூலின் வெளியீட்டுரையை வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் நிகழ்த்துவதையும் நூலாசிரியர், வித்தியாலய அதிபர் செ.சேதுராஜா, ப.நோ.கூ. சங்கத் தலைவர் த.சிதம்பரப்பிள்ளை, கி.நடராசா, எழுத்தாளர்கள் க.சட்டநாதன், ச.இராகவன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (ஐ)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

தனிப் பாவனையிலுள்ள 7 ஸ்ரீ XXX மொறிஸ் மறீனா கார் விற்பனைக்குண்டு. தொடர்பு: திருமதி பிறேமநாயகம் ஜெயதாஸ் மேரி சந்திரா (சாந்தி), 17/2A, புனித அன்னாள் ஒழுங்கை, பாண்டியன்தாழ்வு. T.P. 3360. (20975)

## வீடு விற்பனைக்கு

யாழ். நகரின் மத்தியில் ஆஸ்பத்திரி வீதி, ஸ்ரேசன் அருகில் பருத்தித்துறை வீதியில் வீடு காணியுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: நிரோஜன், 0777 731647/ 0777 262405 (21039)

## திருமண சேவை

உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்களின் ஜாதகங்கள் எம்மிடம் உண்டு. உங்கள் பிள்ளைகளின் திருமண சேவைக்கு எம்மிடம் தொடர்புகொள்ளவும். த.சிவானந்தன், பிரபல சோதிடர், இல.264, பலாலி வீதி, கந்தர் மடம் (பேபி ஸ்ருடியோ முன்பாக)(20984)

## தையல் பயிற்சி ஆரம்பம்

காரைநகரில் போரூட் நிறுவனத்தால் யுவதிகளுக்கான தையல் பயிற்சி வகுப்பு கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அகதிகளுக்கான ஐ.நா.தூதரகத்தின் நிதி உதவியுடன் போரூட் நிறுவனத்தால் நடத்தப்படும் இந்தத் தையல் பயிற்சியில் காரைநகர் பிட்டியெல்லை கிராமத்தைச் சேர்ந்த 30 யுவதிகள் பயிற்சி பெற்று வருகின்றனர். (ஒ-73)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்தவரும் 1970ஆம் ஆண்டு பிறந்த, அரசாங்க திணைக்களத்தில் நிரந்தர உத்தியோகத்தராக கடமையாற்றுபவருக்கு அழகான மணமகள் தேவை. படம், ஜாதகக் குறிப்புடன் விண்ணப்பிக்கவும். சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது. தொடர்பு: விளம்பர இல.1968 (20933)

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 38 வயதுடைய, M.Sc. வெளிநாட்டு பொறியியலாளருக்கு தகுந்த மணமகளை பெற்றோர் உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் எதிர்பார்க்கின்றனர். ஜாதகம் மற்றும் விவரங்களுடன் உடன் தொடர்புகொள்ளவும். தொடர்பு: விள. இல. 1973, மே/பா உதயன். (21007)

## மணமகன் தேவை

1978இல் பிறந்த, அச்சுவினி நட்சத்திரம், அழகிய மணமகளுக்கு தற்போது வெளிநாட்டிலிருந்து இங்கு வந்திருக்கும் பொருத்தமான மணமகன் தேவை. தொடர்பு: 2560 (21011)

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, கார்த்திகை நட்சத்திரம், 81 பாவம், 32 வயது, 5அடி உயரமுள்ள மணமகளுக்குப் பெற்றோர் தகுந்த வெளிநாட்டுப் பிராவு ஜாவுரிமை உடைய மணமகனைத் தேடு கின்றனர். தொடர்பு: 0777-47065, 01-675669 (21006)

## வீதி நிலைமை படுமோசம்

செம்பியன்பற்று,ஓக.4

மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவிலுள்ள நாவலடி, உடுத்துறை வீதி மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாவலடி சந்தியிலிருந்து உடுத்துறைவரை செல்லும் இப்பாதையை மருதங்கேணி இந்து தமிழ் கலவன் பாடசலை, உடுத்துறை மகாவித்தியாலயம், ஆழியவளை சி.சி.பாடசாலை ஆகிய பாடசாலைகளுக்குச் சென்று வருவோரும் கடலுணவு வியாபாரத்தில் ஈடுபடுவோரும் அதிகம் பயன்படுத்துவது குறிப்பிடத்தக்கது. (ஒ-36)

## முதியோர் இல்லத்திற்கு அன்பளிப்பு

காரைநகர்,ஒக.4

காரைநகர் மத்தி முதியோர் பகல் பராமரிப்பு நிலையத்திற்கு சமூக சேவைத் திணைக்களத்தினால் ஒரு தொகுதி சமையல் உபகரணங்களும் தளபாடங்களும் வழங்கப்பட்டுள்ளன.

இருபத்தையாயிரம் ரூபா பெறுமதியான இந்த உபகரணங்களை கடந்த வாரம் காரைநகர் உதவி அரச அதிபா பிரிவுப் பதில் சமூகசேவை உத்தியோகத்தர் ரி.கிருபாகரன் வழங்கினார். (ஒ-73)

# 21ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்



தோற்றம் 26 - 06 - 1941

மறைவு 15 - 07 - 2003

## அமரர் தம்பிஜயா சிவராசா

கண்ணீரில் கரைகின்றோம் ஐயா!<br>
கண்மூடிப் பயணித்தீர் - என்றும்<br>
எம்முடலில் உயிர் வாழும் வரைக்கும்<br>
எம்முள் இறையாகி என்றும் வாழ்வீர்!<br>
உங்கள் ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.

எமது இல்லத்தலைவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் வீட்டுக்கிருத்தியமும் இன்று (04.08.2003) திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். இந்த நிகழ்வுகளில் கலந்து பிரார்த்திப்பதோடு, நண்பகல் மதியபோசனத்திலும் பங்குகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நாவற்குழி,<br>
கைதடி. (20998) (25-24-13-16)

அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

04.08.2003

HAPPY BIRTHDAY



அரியாலையைச் சேர்ந்த<br>
திரு.திருமதி ரங்கநாதன் - சுஜீவா<br>
தம்பதிகளின்<br>
செல்வப் புதல்வன்

## ஆர்னிகன்

தனது முதலாவது பிறந்தநாளை இன்று (04.08.2003) திங்கட்கிழமை தனது இல்லத்தில் வெகு சிறப்பாகக்கொண்டாடுகின்றார்.

இவரை அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, மது மாமா, மாமாமார், மாமிமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தாமார், சித்திமார், அண்ணாமார், அக்காமார், மச்சான்மார், மச்சாள்மார், அன்புத் தங்கை ஆகியோர் ஆலடி, அரசடி ஐங்கரனது அருள்பெற்று சீரும் சிறப்புடன் பல்லாண்டு காலம் வாழ்க வென வாழ்த்துகின்றார்கள்.

*17A, இராஜேஸ்வரி வீதி,*<br>
*அரியாலை.* - குடும்பத்தினர்.

(24-13-16) (21037)

# வீடு வாடகைக்கு

பலாலி வீதி, திருநெல்வேலியில் அமைந்துள்ள பெரிய மாடி வீடு 8பெரிய அறைகளும், 2பெரிய ஹோல்களும், 2சமையல் அறைகளும், 4 மலசலகூடங்களும், 2குளியலறைகளும், ஒரு வெளி மலசலகூடமும் ஒரு வெளி குளியலறையும், போதியளவு பெரிய வாகனங்கள் நிறுத்தும் இடமும் வாடகைக்கு விடப்படும். N.G.OS விரும்பத்தக்கது.

தொடர்பு:<br>
86, பலாலி வீதி, திருநெல்வேலி,<br>
யாழ்ப்பாணம்.<br>
Tel 0712- 307723, E.mail: Karuvel 2003 @ Yahoo.co.UK

(21010) ★ *இரு தனி வீடுகளாகவும் பாவிக்கலாம்.* (27-24-13-16)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது மாவட்ட வைத்திய அதிகாரியும்<br>
சுகாதார வைத்திய அதிகாரியுமான<br>
வைத்திய கலாநிதி

## எஸ்.கதிரவேற்பிள்ளை

அவர்கள் நீதி அமைச்சினால் அகில இலங்கை சமாதான நீதிவானாக நியமனம் பெற்றுள்ளதையிட்டு அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம். இன்று அவரைப் பாராட்டுமுகமாக வைத்தியசாலையில் விழா நடைபெறுகிறது.

ஆதார வைத்தியசாலை,<br>
பருத்தித்துறை. (21035) (18-13-16-24)

உத்தியோகத்தர்கள்,<br>
ஊழியர்கள்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 14 - 12 - 1952



இறப்பு 05 - 07 - 2003

அமரர்

## அழகரட்ணம் திலகரட்ணம்

நெஞ்சமெல்லாம் நிறைந்து விட்ட அன்பு அண்ணாவே!<br>
கண்களைக் குளமாக்கி கரைந்துவிட்ட அண்ணாவே!<br>
இன்று நினைக்கிறேன் உன் திருமுகத்தை என்று காண்பேன்?

அன்புச் சகோதரி,<br>
செல்வராணி மற்றும்<br>
தந்தை, தாய், சகோதரர்கள்,<br>
மைத்துனர்மார்கள்.

*203/6,கண்டிவீதி,*<br>
*அரியாலை, யாழ்ப்பாணம்.*<br>
(20921) (26-24-13-16)

# அறிவித்தல்

## கொக்குவில் மேற்கு மஞ்சவனப்பதி முருகன் ஆலயம் மகாசபை அங்கத்தவர்களை இனங்காணுதல்

யாழ். மாவட்ட வழ.இல:. ந.சொ.02 (புதிய தொடர்)<br>
யாழ். மாவட்ட வழ.இல. ந.சொ.20 (பழைய தொடர்)

20.06.2003, 25.07.2003 ஆகிய தினங்களில் மேற்குறித்த வழ.இல: ந.சொ. 02 இல் எனக்கு இடப்பட்ட கட்டளையின் பிரகாரம் குறித்த ஆலயத்தின் தர்மபரிபாலன சபையினரை தேர்ந்து எடுக்கும் அதிகாரமுள்ள மகாசபை அங்கத்தவர்களை இனங்காணுவதற்கான இந்த அறிவித்தல் பிரசுரிக்கப்படுகின்றது.

பின்வரும் நிபந்தனைக்கு அமைவாக உள்ளவர்கள் ஆலயப்பணியில் ரூபா 250ஐச் செலுத்திப் பற்றுச்சீட்டையும் விண்ணப்பப்படிவத்தையும் பெற்று பூரணப்படுத்தி 04.09.2003 இற்கு முன்பதாக "பெறுநர் மஞ்சவனப்பதி ஆலயம், கொக்குவில்" என்ற விலாசத்திற்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கவும்.

நிபந்தனைகள்:

அ. கொக்குவில் மேற்கில் வசிப்பவர்களாகவும் சைவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

ஆ. 21 (இருபத்தியொன்று ) வயதுக்கு மேற்பட்ட ஆடவர்கள் மட்டும்.

இ. யாழ். மாவட்ட வழ.இல. ந.சொ 20 (பழையதொடரில்) குறிப்பிட்ட பின்வரும் 24 நபர்களின் பரம்பரையில் வந்த ஆண், பெண் இருபாலாரின் சந்ததியினராக இருத்தல் வேண்டும்.

குடும்ப விவரம் வருமாறு:

01. சின்னத்தம்பி காசிநாதர்.
02. வைரவநாதர் சின்னத்தம்பி
03. விசுவநாதர் ஆறுமுகம்.
04. நாகப்பர் வேலுப்பிள்ளை.
05. கார்த்திகேசர் கந்தா.
06. கந்தர் ஆறுமுகம்.
07. பூதர் கந்தர்.
08. சண்முகம் வேலுப்பிள்ளை.
09. வைரவநாதர் சுப்பர்.
10. முருகர் விசுவநாதர்.
11. காசிநாதர் சண்முகம்.
12. முருகர் கார்த்திகேசன்.
13. நன்னியர் சின்னத்தம்பி.
14. பூதர் பண்டாரம்.
15. மாரிமுத்து வல்லிபுரம்.
16. சரவணை தம்பிஜயா.
17. கார்த்திகேசர் செல்லப்பா.
18. அருணாசலம் தம்பியையா.
19. கந்தர் நாகர்.
20. இராமு சின்னட்டி.
21. வைரமுத்து கைம்பெண் தெய்வானை.
22. ஆறுமுகம் கைம்பெண் பார்வதி.
23. சின்னாச்சி கைம்பெண் அம்பலவி.
24. ஆறுமுகம் கார்த்திகேசு.

விண்ணப்பதாரிகள் அனைவரும்

1. வதிவிடத்தை உறுதிப்படுத்தல்.
2. சமயத்தை உறுதிப்படுத்தல்.
3. வயதினை உறுதிப்படுத்தல்.
4. வம்சாவளி தொடர்பு ஆவண ரீதியாக உறுதிப்படுத்தக் கூடிய ஆவணங்களின் (பிறப்புச் சான்றிதழ் முதலிய) போட்டோப் பிரதி இணைக்கப்படல் வேண்டும்.

அத்துடன், தமது பரம்பரை எவ்வாறு மேற்குறித்த 24 நபர்களின் யாராவது ஒருவருடன் தொடர்புடையது என்பதை விளக்குவதற்கான வம்சாவளி வரைபினை சமர்ப்பிக்கவேண்டும்.

குறிப்பு: இந்த அறிவித்தல் 21.07.2003 ஆம் தினம் உதயன் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அறிவித்தலின் திருத்திய அறிவித்தல் ஆகும்.

வே.நடராசா (பெறுநர்)<br>
மஞ்சவனப்பதி முருகன் ஆலயம், கொக்குவில்.

(C/29285) (25-24-13-16)

# கல்விச்சாலைக் காட்சிகள்



தென்மட்டுவில் தேனொளி முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுப் போட்டி அண்மையில் பள்ளி மைதானத்தில் இடம்பெற்றபோது பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட தென்மராட்சி முன்பள்ளி உதவிக் கல்விப்பணிப்பாளர் சு.பாக்கியராஜா கொடியேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்தபோது எடுக்கப்பட்ட படம்.



யாழ். தேசியக் கல்வியியல் கல்லூரி உள்ளகப் பயிற்சி மாணவர் க.ரஞ்சன் யாழ். முத்துத்தம்பி மகாவித்தியாலயத்தில் அண்மையில் நடத்திய கணித பாட உபகரணக் கண்காட்சியின் போது எடுக்கப்பட்ட படம் இது. *(படம்: வலிகாமம் தெற்கு செய்தியாளர்)*



யாழ்.சென்.ஜேம்ஸ் மகளிர் வித்தியாலய முத்தமிழ் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் (தமிழ்) எம்.எஸ்.ஸ்ரீ தாயாளன் வரவேற்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படம். *(படம்: குருநகர் செய்தியாளர்)*



வடலியடைப்பு சைவப்பிரகாச வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் வித்தியாலய அதிபர் வி.நடராசா தலைமையில் நடைபெற்றபோது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

*(படம்: சண்டிலிப்பாய் செய்தியாளர்)*

## நல்லூர் ஆலய சூழலில்

யாழ்ப்பாணம்,ஓக.4

நல்லூர்க் கந்தன் ஆலய உற்சவத்தையொட்டி நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தினர் வருடந்தோறும் நடத்தும் தெய்வீக இசையரங்கு நிகழ்வில் இன்று திங்கட்கிழமை மாலை 6.30 மணிக்கு நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் எஸ்.ஆர்.திருஞானசம்பந்தன் பண்ணிசை வழங்குகிறார். இதில் பக்கவாத்தியங்களாக வயலின் - கே.பத்மநாதன், மிருதங்கம் - எஸ்.துரைராசா, கடம்- ஏ.செல்வரத்தினம், கெஞ்சிரா- பி.சயாமாகிருஷ்ணா ஆகியோர் பங்கேற்கின்றனர்.

## வலி.தென்மேற்கில் கண்ணிவெடி அகற்றும் பணி

யாழ்ப்பாணம்,ஓக.4

வலி.தென்மேற்குப் பகுதியில் கண்ணிவெடிகள் மற்றும் வெடிக்காத நிலையில் உள்ள வெடிபொருள்கள் போன்றவற்றை அகற்றும் பணியில் கண்ணிவெடி அகற்றும் 'ஹலோ ட்ரஸ்ட்' அமைப்பு ஈடுபடவுள்ளது.

காக்கைதீவு பழைய இறங்கு துறை முகப்பகுதியில் உள்ள கட்டடங்கள். மாதகல் ஆஸ்பத்திரிக்கு அருகில் உள்ள கொல்களப் பகுதி ஆகியவற்றில் மிதிவெடிகள், கண்ணிவெடிகள் மற்றும் வெடிபொருள்கள் அகற்றப்படவுள்ளன. (ஓ-185)

## மீள்குடியமர்வு கொடுப்பனவு

செம்பியன்பற்று,ஓக.4

வடமராட்சி கிழக்கு, மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவில் மீளக் குடியமர்ந்தவர்களுக்கான கொடுப்பனவில் முதற்கட்டமாக 15 ஆயிரம் ரூபா பெற்றவர்களுக்கு மிகுதி 10 ஆயிரம் ரூபாவை வழங்க மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனை நடவடிக்கை எடுத்துள்ளது.

மீளக்குடியமர்ந்த 266 பேருக்கு மிகுதி 10 ஆயிரம் ரூபா வழங்க பயனாளிகளின் பட்டியலை அனுப்புமாறு யாழ். செயலகம் கேட்டுள்ளது. இதற்கான நடவடிக்கையில் கிராம அலுவலர்கள் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ஓ-36)

## வீதியோரம் மண் அகழ்வு

செம்பியன்பற்று,ஓக.4

மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவிலுள்ள வத்திராயன் மத்தி, அரசடி வீதியின் இரு மருங்கிலும் மண் அகழப்படுவதால் அந்த வீதியில் விபத்துக்கள் நேரிடும் வாய்ப்புள்ளதாக அஞ்சப்படுகிறது.

இந்த மண் அகழ்வை உடனடியாக நிறுத்துமாறு வத்திராயன் மக்கள் வடமராட்சி கிழக்கு அரசியல் துறையினரிடம் முறையிட்டுள்ளனர். (ஓ-36)

## மாசார் - மருதங்கேணி வீதி புனரமைப்பு

செம்பியன்பற்று,ஓக.4

மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவில் உள்ள மாசார் மருதங்கேணி வீதி புனரமைக்கப்பட்டு வருகிறது.

இவ்வீதி புதுக்காட்டுச் சந்தியிலிருந்து தாளையடிக்கு வரும் பிரதான பாதையாகும். சோரன்பற்றிலிருந்து மருதங்கேணி பாலம் வரையிலான பாதையே புனரமைக்கப்பட்டு வருகிறது. (ஓ-36)

## விவசாயக்குழுக் கூட்டம்

காரைநகர்,ஓக.4

காரைநகர் உதவி அரச அதிபர் பிரிவு விவசாயக்குழுக் கூட்டம் நாளை மறுதினம் புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு காரைநகர் உதவி அரச அதிபர் வே.சாம்பசிவம் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஓ-73)

## சகாயவிலையில் மரக்கறி விதைகள்

சண்டிலிப்பாய்,ஓக.4

மாகியப்பிட்டியில் இயங்கிவரும் கீரிமலை கமநலகேந்திர நிலையத்தில் விவசாயிகளுக்கு தேவையான மரக்கறி விதைகள் சகாய விலையில் வழங்கப்பட்டு வருகின்றன. யாழ். குடா, விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கத்தினால் உற்பத்தி செய்யப்பட்ட வெண்டி, தக்காளி, பயிற்றை, கத்தரி மற்றும் புடோல், கரட், பீட்றூட், கோவா ஆகிய மரக்கறி விதைகள் இங்கு கையிருப்பில் உள்ளதாகவும் -

விவசாயிகள் இவற்றை பெற்றுப் பயனடைய முடியும் என்றும் - கமநல கேந்திர நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன. (ஓ-135)

# நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்

இரண்டாம் திருவிழா



## திருப்பாதம் போற்றி!

அழகு கொண்டவனே உன் பாதம் போற்றி
அறிவு மிக்கவனே உன் நாமம் போற்றி
ஆணவம் அழிப்பவனே உன் வேல் போற்றி
ஆன்மாக்கு அருள் அளிப்பாய் உன் தாள் போற்றி
இன்பத்தைக் கொடுப்பவனே உன் இறையருள் போற்றி
இனிமைச்சொல் அளித்தவனே உன் மனம் போற்றி
ஈதலுக்கு மன்னவனே உன் இதயம் போற்றி
ஈசன் மகனே உன் பாதம் போற்றி போற்றி.

- சி.சிவசெந்தூரன்,
*வேலணை.*

## நல்ல காரியம் நடக்கும்

நல்லூரப் பதிக்குச் சென்று
நாவருகப் பாடுங்கள்
நல்ல காரியம் நடக்கும்
கொல்லும் கொடு நோய்கள்
கிட்டவே அணுகாது
சேவிப்போம் வாருங்கள்
நல்லூரான் மலரடியை.

- கே.எஸ்.சிவஞானராஜா.

## நல்லூரிலே பவனி

திருநகராம் புகழ் நல்லூரிலே பவனியாம்
முருகன் வண்ணமயில் ஏறியே பவனியாம்
எழில்வள்ளி மணவாளன் இங்கு பவனியாம்
சூழ்ந்து பக்தர்களும் பண்பாடிவரப் பவனியாம்
தெள்ளு தமிழ்த் தெய்வம் கந்தன் பவனியாம்
தமிழன் பட்டதுயர் மாய்ந்திடவே பவனியாம்
பக்தர் இடர் தீர்த்து அருளப் பவனியாம்
பாரெங்கும் தமிழன் ஏற்றி நிற்கப் பவனியாம்.

- நயினை விஜயன்.

## வளமுடன் வாழ வைப்பான்

காவிய நாயகனாம் கந்தன்
கவலைகள் போக்கும் தீரன்
பாவிகள் வினைகள் தீர்ப்பான்
பக்தர்கள் தம்மைக் காப்பான்
நாவினால் அவனைப் பாடி
நாளுமே தொழுவர் தம்மை
நல்லையம்பதிக்குமரன்
வளமுடன் வாழ வைப்பான்.

- கவிஞர் வ.யோகானந்தசிவம்.

## திருவருளதனை

நாள நாடி நரம்பு மூளை
யெங்கும் பரவசம் பொங்க
ஆழமான நின் பக்தித் திருவருள்
தனை நினைந்துருகி வேண்டுகிறேன்
ஈழவள நாட்டில் நிரந்தரச்
சமாதானம் நிலவி எம்மினம்
மீள உன்னத உயர்வுடன் வாழ
வழி காட்டுவாய் நல்லூரானே!

- ஜெயஹேமலதா,
*தொட்டிலடி.*

## தருணம் இதுவன்றோ!

கருணை புரியும் நல்லைநகர் கந்தனே
கவலைகள் போக்கிடும் கார்த்திகேயனே
அருணன் உதிக் கையிலே உன் சந்நிதியை நாடி வந்து
அடி அழித்து வணங்கி நின்றோம் அடியவர் நாம்
வருணன் மழை பொழிவதுபோல் அருள்மழை பொழிந்து
அடியாரைக் காத்திடும் அன்பான தெய்வமே!
தருணம் இது நல்ல சமாதானம் நிலைத்திட
தடையின்றி ஒரு தீர்வு ஏற்பட அருள்வாயே.

- எம்.இந்திராணி
*ஏழாலை.*

# மாணவர்கள் அறிவியலில் முன்னேறுவதற்கு ஆங்கிலத்தில் தேர்ச்சி பெறுவது அவசியம்

## யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,ஓக.4

அறிவியல் சார்ந்த துறைகளில் முன்னேற வேண்டுமாக இருந்தால் மாணவர்கள் ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற வேண்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ் வலயக் கல்விப் பணிப்பாளர் பி.விக்னேஸ்வரன்.

யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியின் பரிசளிப்புத் தின நிகழ்வில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கல்லூரி அதிபர் ந.வன்னியசிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மாணவர்கள் எல்லோரும் ஆங்கிலக் கல்வியை ஆர்வத்துடன் கற்க வேண்டும். அது எமக்குப் பல வழிகளிலும் நன்மையைத் தரும். இன்றைய மாணவர்களில் பலர் ஆங்கிலக் கல்வியைக் கற்பதில் பின்நிற்கிறார்கள். ஆசிரியர்கள் அதனைக் கற்பிக்கும் போது மாணவர்கள் ஏனோதானோ என்ற மனோநிலையில்தான் வகுப்பறைகளில் இருக்கிறார்கள்.

இதனால், பாதிக்கப்படப் போவது எமது எதிர்காலச் சமூகம்தான். குடாநாட்டைப் பொறுத்தவரையில் அறிவியல் சார்ந்த துறைகளில் நாம் எவ்வளவோ முன்னேற வேண்டியுள்ளது. அதற்கு நாம் ஆங்கிலக் கல்வியில் தேர்ச்சிபெற வேண்டும். இந்தியாவை எடுத்துக்கொண்டால் ஆங்கிலத்தின் மூலம்தான் அறிவியல் துறை வளர்ந்து செல்கிறது.

கடந்த ஆண்டில் இருந்து அரசு ஆங்கில பாடத்தை உயர்தர வகுப்பில் கட்டாய பாடமாக்கியுள்ளது. இதன்மூலம் ஆங்கிலக்கல்வியின் அவசியம் பற்றி மாணவர்களாகிய நீங்கள் அறிந்துகொள்ளலாம்.

-என்றார். (ஓ-10-ரி)

# தேசியப் போட்டிக்கு அணியை அனுப்பியதில் அக்கறையீனம்

## வீர, வீராங்கனைகள் விசனம்


வலி.வடக்கு,ஓக.4

கடந்த மாத இறுதியில் கொழும்பில் இடம்பெற்ற 81 ஆவது தேசிய மெய்வன்மைப் போட்டிக்கு யாழ். மாவட்ட வீரர்களை அனுப்புவதில் சம்பந்தப்பட்டவர்கள் போதிய அக்கறை காட்டவில்லையென வீர, வீராங்கனைகள் கவலை தெரிவிக்கின்றார்கள்.

கடந்த 25ஆம் திகதி முதல் 27ஆம் திகதிவரை கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் இப்போட்டி கள் இடம்பெற்றன. 8 வீர, வீராங்கனைகள் இப்போட்டியில் கலந்துகொள்ளத் தகுதிபெற்றிருந்தனர்.

ஆயினும், அவர்களில் நான்கு வீரர்கள் மட்டும் போட்டியில் கலந்து கொண்டனர். ஏனையோர் பொருளாதார நெருக்கடி காரணமாக கலந்து கொள்ளவில்லை என்று கூறப்படுகிறது.

மாகாணமட்ட சம்பியன்களான சிவகுமார் கமலமோகன், எம்.பிரதீப்குமார், எம்.சஞ்சீவ் மற்றும் செல்வி கே.மிதிலா ஆகியோரே போட்டியில் கலந்துகொண்டதாகவும் - இவர்களுக்கு யாழ் மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர்கள் உதவியதாகவும் - அறியமுடிகிறது. (ஓ-86)



கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் கடந்த மாதம் 25ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரை இடம்பெற்ற 81ஆவது தேசிய மெய்வன்மைப் போட்டிகளின் ஆரம்ப நிகழ்வின்போது இடம்பெற்ற அணிவகுப்பில் யாழ். மாவட்ட அணி குறைந்த எண்ணிக்கையான வீரர்களுடன் கொடியுமின்றி பங்கேற்ற காட்சி.

# விளையாட்டு நிகழ்வுகள்

வலி.வடக்கு,ஓக.4

இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை மாவட்ட மட்டத்திலான 19 வயதுக்குட்பட்டவர்களின் அணிகளுக்கு இடையே நடத்தும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று திங்கட்கிழமை தம்புள்ள சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறும் ஆட்டத்தில் திருகோணமலை மாவட்ட அணியும் யாழ். மாவட்ட அணியும் மோதவுள்ளன.

(ஓ-5-86)

★ ★ ★

வலி.வடக்கு,ஓக.4

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக், யாழ். மாவட்ட முன்னணி உதைபந்தாட்ட அணிகளுக்கு இடையே நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு வதிரி பொமேர்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் கொக்குவில் பொற்பதி விளையாட்டுக் கழகமும் அராலி ஏ.எல். விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

(ஓ-5-86)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஓக.4

பலாலி ஆசிரிய கலாசாலை ஆசிரிய மாணவர்களின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று திங்கட்கிழமை அதிபர் எஸ்.சதாசிவமூர்த்தி தலைமையில் கலாசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

(ஓ-29-5)

### தவறிவிட்டது

நல்லூர் ஆலய வீதியில், டயறி, படங்கள், திறப்புக் கோர்வை, முக்கிய ஆவணங்கள் அடங்கிய பிறவுன் நிற சிறிய பிரயாணப்பை 02.08.2003 சனிக்கிழமை தவறிவிட்டது. கண்டெடுத்தவர் S.திருச்செல்வம், *25/1, இராஜேஸ்வரி வீதி, நாயன்மார்கட்டு* எனும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

(21049) (31-14-12-17)

### புதிய வகுப்புகள்

**இருபாலை மக்கள் நலன்காக்கும் பிரிவில்**

தமிழ், ஆங்கில தட்டச்சு, தையல் வகுப்புகள் நடத்தப்பட்டுவருகின்றன. புதிய மாணவர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

முடிவு திகதி : 10.08.2003.

(21055) (12-14-31-17)

### NEW SCIENCE COLLEGE

**PHYSICS**

2004 காந்தப்புலம்.
செவ்., புதன்-4-5 (P.M.)
ஆரம்பம் 05-08-2003

2005
அலைகளும் அதிர்வுகளும்
திங்கள் - 4-5 (P.M.)
புதன் - 5-6 (P.M.)
ஆரம்பம் 06-08-2003

By. R. குகன் B.Sc.

(21054) (32)

# நுணாவில் பகுதியிலிருந்து காயமடைந்தவரை ஏற்றிவந்த ஓட்டோ விபத்தில் சிக்கியதில் அவர் படுகாயம்!

## உடன் வந்தவரும் யாழ். ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம்,ஓக.4

தென்னை மரம் முறிந்து வீழ்ந்ததில் காயமடைந்தவரை ஆஸ்பத்திரிக்கு எடுத்து வந்த ஓட்டோ விபத்துக்குள்ளானதில் அவர் மேலும் படுகாயமடைந்தார். ஓட்டோவில் வந்தவரும் இதில் காயமடைந்தார்.

அரியாலை, மாம்பழம் சந்தியில் நேற்று இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் நுணாவில் மேற்கைச் சேர்ந்தவரும் முதலில் காயமடைந்தவருமான இராமகிருஷ்ணர் புவனேஸ்வரி (வயது 28) என்பவரும் அவரை அழைத்து வந்தவரான மணிசேகரம் சியாமணி (வயது 40) என்பவருமே படுகாயமடைந்தவர்களாவர். முன்னதாக நுணாவில் பகுதியில் இபுவனேஸ்வரி சைக்கிளில் சென்று கொண்டிருக்கும் போது பட்ட தென்னைமரம் ஒன்று முறிந்து அவர் மீது வீழ்ந்ததில் அவர் காயமடைந்தார்.

காயமடைந்த அவரை சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்சென்ற வேளை அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டார். சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அவ்வேளை அம்புலன்ஸ் வாகனம் இருக்கவில்லை. அதனால், அவர்கள் சென்ற ஓட்டோவிலேயே யாழ். ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

யாழ். ஆஸ்பத்திரிக்கு வந்துகொண்டிருந்தவேளை அரியாலை, மாம்பழம் சந்திப் பகுதியில் சென்ற மினிபஸ் ஒன்று ஓட்டோவுடன் மோதியதால் ஓட்டோ புரண்டு விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் நோயாளியும் அவரை அழைத்து வந்தவரும் படுகாயமடைந்தனர். இவர்கள் உடனடியாகவே வேறொரு வாகனத்தில் எடுத்து வரப்பட்டு யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். ஏற்கனவே காயமடைந்திருந்த புவனேஸ்வரி, சுயநினைவிழந்து ஆபத்தான நிலையில் உள்ளதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன. (ஓ-15-117)

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஓக.4

தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தில் நாளை மூன்றாம் ஆடிச் செவ்வாய், சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை, வெள்ளானைச் சருக்கம் படித்தல், ஆடிச்சோதி ஆகியவற்றையொட்டி விசேட வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஓக.4

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. (ஓ-29)

★ ★ ★

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை நடத்தும் சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசைதின நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு நீராவியடியிலுள்ள நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஓ-4)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஓக.4

தாவடி ஸ்ரீ அம்பலவாண கந்தசுவாமி கோயில் வருடாந்த மஹோற்சவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை பகல் 11மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து பத்து நாள்கள் நடைபெறும் உற்சவத்தில் எதிர்வரும் 26ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

(ஓ-10)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஓக.4

அளவெட்டி சைவ வாலிபர் சங்கமும் பொதுமக்களும் இணைந்து நடத்தும் சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசைத்தினம் நாளை செவ்வாய்க்கிழமை அளவெட்டி கும்பிளாவளைப்பிள்ளையார் கோயிலில் நடைபெறவுள்ளது.

அன்றையதினம் புராணப்படிப்பு, மகேஸ்வரபூஜை, திருவீதி உலா என்பனவும் இடம்பெறும்.

(ஓ-4)

# மரண அறிவித்தல்

## தம்பிராஜா சுப்பிரமணியம்

(ஓய்வுபெற்ற இராணுவ பொலீஸ் அதிகாரி)

சிறுப்பிட்டி தெற்கைச் சேர்ந்த தம்பிராஜா சுப்பிரமணியம் நேற்று (03.08.2003) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற தம்பிராஜா தம்பதிகளின் மூத்த புதல்வனும் துரைராஜசிங்கம் காலஞ்சென்ற தவமணி மற்றும் க.நவமணி ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற சின்னப்பிள்ளையின் அன்புக் கணவரும் விசயரட்ணம் (ஆஸ்திரேலியா), ஸ்ரீமதி(சுவிஸ்), அம்பிகா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் மகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் சுகந்தினி (ஆஸ்திரேலியா), நவரத்தினராஜா(சுவிஸ்), வாமதேவன் (சுவிஸ்), ஸ்ரீஸ்கந்தன், அம்பிகா, நவநீதன், ஸ்ரீமுகுந்தன் ஆகியோரின் அன்பு மாமனாரும் வாமினி, ராகுலன், தனுஜா, ஆரூரன், செந்தூரன், கிருஸ்ணா ஆகியோரின் பேரனும் பொன்னம்பலம் (இளைப்பாறிய ஆசிரியர்) அவர்களின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் திங்கட்கிழமை பகல் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சிறுப்பிட்டி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கந்தசாமி நவநீதன்
(மருமகன்)

*சிறுப்பிட்டி தெற்கு,*
*நீர்வேலி*

(21046) (26-12-14-17-31)

STUDY IN INDIA

A/L சித்தியடைந்தவர்களும், 2003 ஆண்டு A/L பரீட்சை எழுதியவர்களும், O/L சித்தியடைந்தவர்களும் இந்தியாவில் Bangalore University, Anna University, Periyar University ஆகிய பல்கலைக்கழகங்களின் பட்டதாரியாக வாய்ப்பு

Available Courses

Engineering, Electronics, Communication, Mechanical, IT, B.Sc Micro Biology, Genetics, Computer Science, BBM, BBA, BCA, B.Com, and Diploma Courses, மற்றும் பாட நெறிகள்

Admission, Visa and Hostel. arrangements செய்து கொடுக்கப்படும்

எமது நிறுவனத்தினால் அனுப்பப்பட்ட 50ற்கு அதிகமான மாணவர்கள் தற்பொழுது இந்தியாவில் கல்வி கற்றுக் கொண்டு இருக்கிறார்கள்.

Become a World Recognized GRADUATE

மேலதிக விபரங்களை யாழ்ப்பாணத்தில் பெற்றுக்கொள்ள

IPAS- Institute of Professional Accounting Studies
199, Main Street, Jaffna. Tel: 0777-563292




Affiliated to
SCHOLARS INFORMATION CENTER
2nd Floor, Colombo Plaza, 50 Galle Road,
Colombo-03. Tel: 074- 512 591

உங்கள் கொள்வனவுக்கு வசதியாக
மயூரா அன்பளிப்பு அகம்

★ அழகுசாதனப் பொருள்கள் ★ அன்பளிப்புப் பொருள்கள்
★ இலத்திரனியல் பொருள்கள்
★ பெண்களுக்கான 'மேக்கப்' பொருள்கள் மற்றும் விளையாட்டுப் பொருள் (Toys) வகைகளையும் - பெற்றுக்கொள்ள...

MAYOORA GIFT CENTRE
மயூரா அன்பளிப்பு அகம்

No. 14, New Market (Out side),
Power House Road,
Jaffna.

இல.14, நவீனசந்தை (வெளிப்புறம்),
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

T.P : 2084.

★ 'ஓடியோ', 'வீடியோ' கெசற் வகைகளை
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

(21047) (31-12-14-17)

## ஜெனரேட்டர்கள்

உங்களது மின்சாரப் பிரச்சினையைத் தீர்க்க ஹொண்டா (HONDA) ஜெனரேட்டர்கள்.

650W,1000W, 1200W, 1600W, 2600W

வீடுகள், காரியாலயங்கள், ரெஸ்டூரண்டுகள், கடைகள், மண்டபங்கள், டிஸ்பென்சறிகள், தோட்ட பங்களாக்கள்.....

இன்னும் பல!

கையிருப்பு சொற்பமே!

உடனடி விற்பனைக்கு உண்டு

**GENERAL EQUIPMENTS LTD**

316,400, Sri Sangaraja Mawatha, Colombo - 12

(C/29276) Tel.: 345046, 327264, 343822, 430799, Fax: 434637

(27-24-13-16)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி தவபாக்கியம் வேலுப்பிள்ளை

தொட்டிலடி, சங்கானையைப் பிறப்பிடமாகவும் சுவிஸை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தவபாக்கியம் வேலுப்பிள்ளை 29.07.2003 செவ்வாய்க்கிழமை சுவிஸில் காலமானார்.

அன்னார் தொட்டிலடி, சங்கானையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான வேலாயுதம் - தங்கப்பிள்ளையின் அன்பு மகளும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை (முன்னாள் வீதிப்பரிசோதகர், இ.போ.ச.) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சந்திரகுமார் மற்றும் கணேஸ்குமார் (சுவிஸ்), காலஞ்சென்ற ஞகதாசன் (சுவிஸ்) மற்றும் புஸ்பலதா (இந்தியா), உதயகுமாரி (சுவிஸ்), பத்மகுமாரி (சுவிஸ்), காலஞ்சென்ற ஜெகதாசன் மற்றும் கோமளா (நோர்வே) ஆகியோரின் பாசமிகு தாயாரும் மகாதேவி (சுவிஸ்), காலஞ்சென்ற சியாமளா (சுவிஸ்) மற்றும் நகுலேஸ்வரன் (இந்தியா), கணேசராசா (சுவிஸ்), தர்மரட்ணம் (சுவிஸ்), சிவகணநாதன் (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமியாரும் திரு.திருமதி ஜடிலா திருக்குமரன், ஜசீலா, ஜலஜா, ஜசிக்கா, ஜகானா, பிரணவா, ஸ்ரீவரதன், காயத்திரி, கேசிகா, ஜனோஜன், சாருஜன், நிவேதிகா, றசீகா, கபினா, சகானா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.08.2003) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு சுவிஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விலாசம்:
Mr. V.Goneshkumar
Hintergasse 3,
9437 Marbach,
Switzerland.
T.P. No. : 0041717773176

தகவல்:
உறவினர்கள்,
மு.சிவஞானம (நச்சம்), (பன்னாலை)
திருமதி இ.பரமேஸ்வரி
(K.K.S. வீதி, கோண்டாவில்)
வ.சிவகுருநாதன்
(8ஆம் கட்டை ,தெல்லிப்பழை)

(21036) (25-24-13-16)

## திருமதி செல்லப்பாக்கியம் செல்வநாயகம்

செல்வநாயகம் (ஓடலி) அவர்களின் அன்பு மனைவி செல்லப்பாக்கியம் அவர்கள் 02.08.2003 சனிக்கிழமை பிரான்ஸில் காலமானார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முடக்காடு வீதி,
கரவெட்டி.

(சி-29259) (25-24-13-16)

தகவல்:
பிள்ளைகள்.

# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

| | |
|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 496 |
| திகதி | 01.08.2003 |

டிக்கட்டின் நிறம் - சிவப்பு

செல்லுபடியாகும் தொடர் இல.
5083267-5098185

வெற்றி இலக்கங்கள்: **19 23 33 35**

லக்கினம்: துலாம்




ஜக்பொட் பரிசு
ரூபா. 1,000,000/-
வெல்லப்படவில்லை

இந்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட் ரூபா **1,734,500/-**

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1 இல | 328,875 | 10 | 3,288,750 |
| 2 இலக்கங்கள் | 30,227 | 20 | 604,540 |
| 1 இல + லக்கினம் | 29,935 | 30 | 898,050 |
| 2 இல + லக்கினம் | 2,720 | 100 | 272,000 |
| 3 இலக்கங்கள் | 789 | 500 | 394,500 |
| 3 இல + லக்கினம் | 78 | 5,000 | 390,000 |
| 4 இலக்கங்கள் | 05 | 100,000 | 500,000 |
| 4 இல + லக்கினம் | - | 1,000,000 | - |
| மொத்தம் | 392,629 | - | 6,347,840 |

மொத்தப் பரிசுத் தொகை
ரூபா.6,347,840/-

தொடர் இல. 4098866க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுகள் 2003 ஆகஸ்ட் 05ம் திகதி செவ்வாய்க் கிழமை செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

**5087350-2-08**
**5088486-9-58**
**5097234-0-85**
**5083317-5-60**
**5085459-9-52**

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கல் வீதி,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

PHOENIX O&M


அறிமுகப்படுத்தும் விலை
ரூ. 1.1 மி + VAT



HMY AMBASSADOR CLASSIC 2000 DSZ
பாதுகாப்புக்கு முதலிடம்

## புதிய நாள் புதிய பயணம்...



## Brand New - டீசல் கார் ஒன்று !

**பரம்பரைக்கே ஏற்ற புத்தம்புது டீசல் கார் ஒன்று இன்று முதல் உங்கள் கையில்**
4 சஹாப்த்தங்கள் 50 மில்லியனுக்கு மேல் தயாரிக்கப்பட்ட இந்திய வீதிகளையும் மக்களையும் கவர்ந்து வெற்றி கண்ட அம்பாஸெடர் கிளாசிக் 2000 DSZ வாகனத்தின் உரிமையாளராவதற்கு இப்பொழுது உங்களுக்கும் ஒரு அரிய சந்தர்ப்பம்

- பாதுகாப்புக்கு முதலிடம்.
- சிக்கனமான டீசல் பாவனை.
- வலுவான பவர் ஸ்டியரிங்.
- விசேட குளிர்சாதன வசதி.
- வசதியான ஆசனங்கள்.
- அதிக பாரம் சுமக்கக்கூடிய வல்லமை.

மேலும் விபரங்களுக்கு
யூனி மோட்டர்ஸ் (பிரைவேட்) லிட்
108, நியூ புள்ளர்ஸ் வீதி, கொழும்பு - 04.
ஈ-மெயில்: yunimtrs@lankabellnet.com

## சைக்கிள் மீட்பு

...த வாரம் காரைநகர் பயிரிக் ...குதியில் திருடப்பட்ட சைக் ...விடுதலைப் புலிகள் மீட்டு உரி ... ஒப்படைத்ததாகக் கூறப்படு ... இதேசமயம்; காரைநகர் வலந் ...ச் சந்தியில் கடந்த வியாழக் ...ம நிறுத்திவைக்கப்பட்டிருந்த ... சைக்கிள் ஒன்று திருடப்பட் ...ாது. (ஒ-73)

# வீரமுரசு கலையரங்கம்

விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியற்துறையினரின் ஏற்பாட்டில் வீரமுரசு கலையரங்கம் இன்று மாலை 7மணிக்கு நவாலி முருகானந்தா சனசமூக நிலைய முன்றிலில் நடைபெறவுள்ளது. நவாலி தெற்கு தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் இ.சசிக்குமார் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் மாவீரர் கபிலனின் தந்தை சு.மார்க்கண்டு, மாவீரர் குட்டியின் தாயார் திருமதி சி.சிவபாக்கியம், மாவீரர் வீரவேங்கையின் தந்தை வே.பாலசுப்பிரமணியம் ஆகியோர் பொதுச்சுடரினை ஏற்றுவர்.

நவாலி முருகமூர்த்தி ஆலயப் போஷகர் வே.சிற்றம்பலத்தின் உரையைத் தொடர்ந்து உருவளை நலன் புரிநிலைய கலைஞர்களின் ஆழியின் கீதங்கள், புதுவை அன்பனின் "யாமார்க்கும் குடியல்லோம்" ஆகிய கலை நிகழ்வுகள் இடம்பெறும்.(ஒ-6)

## சாவகச்சேரி இந்துக் கல்லூரி
### பழைய மாணவர் சங்கம்

வெளிநாடுகளிலிருந்து வருகைதந்துள்ள பழைய மாணவர்களுடனான கலந்துரையாடல்.

இடம்: கல்லூரி மண்டபம்
காலம்: 06.08.2003 புதன்கிழமை பி.ப. 4.00 மணி

மேற்படி கலந்துரையாடலில் வெளிநாடுகளிலிருந்து வருகைதந்துள்ள கல்லூரியின் சகல பழைய மாணவர்களையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

பழைய மாணவர் சங்கம்
04.08.2003 (21040) (24-13-16) சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

## சங்கானை ஆஸ்பத்திரி கட்டடத் திறப்புவிழா

சங்கானை அரசினர் வைத்தியசாலையில் சுமார் 40 லட்சம் ரூபா செலவில் புதிதாக நிறுவப்பட்ட இரு மாடிகளைக் கொண்ட நிர்வாகக் கட்டடத்தின் திறப்புவிழா எதிர்வரும் 6ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10மணிக்கு நடைபெறவுள்ளது. வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் ஏ.யோகராசா தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் பிரதம விருந்தினராக வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் சோ. அமிர்தலிங்கம் கலந்துகொண்டு கட்டடத்தைத் திறந்துவைப்பார்.(ஒ-135)

## கொடிகாமத்தில் மின்சாரத் தடை

யாழ்ப்பாணம்,ஓக.4

கொடிகாமம், மிருசுவில் பகுதிகளுக்கான மின்சார விநியோகம் கடந்த சில தினங்களாக தடைப்பட்டுள்ளது.

இப்பகுதிகளுக்கு மின்விநியோகத்தை வழங்கி வந்த கொடிகாமம் புகையிரத நிலையப் பகுதியிலுள்ள மின் பிறப்பாக்கி பழுதடைந்து உள்ளமையே இதற்கு காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மைக்காலமாக கொடிகாமம், மிருசுவில் பகுதிகளுக்கான மின்விநியோகம் சீரற்றிருப்பதினால் இப்பகுதி மின் பாவனையாளர்கள் குறிப்பாக மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தென்மராட்சிப் பகுதிக்கான 24 மணி நேர மின்விநியோக நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைவுபடுத்தவேண்டும் எனவும் இப்பகுதி மக்கள் கோரியுள்ளனர்.(ஒ-15)


## நம்ப முடியவில்லையா....!

### பல வர்ணங்களில் இறபர் சீல்

- ★ சிவப்பு, பச்சை, நீலம், ஊதா, கறுப்பு என பல வர்ணங்களில் இறபர் சீல்
- ★ மையில் அமர்த்தி அச்சு அடிக்கத் தேவையில்லை. நேரடியாக அச்சடிக்கலாம்.
- ★ பல்லாயிரக்கணக்கான தடவைகள் பிரதி எடுக்கலாம்.
- ★ நீடித்த பல வருடப் பாவனை
- ★ உங்கள் எண்ணம்போல் வடிவங்களில் அச்சுப்பெற - தரமான, நேர்த்தியான, கவர்ச்சியான றபர் சீல்கள் இப்போது வடபகுதியில் நீங்கள் பெற,

## யுசேர

35, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
☎ 0777 110610
(21029) (27-12-13-16)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 15 - 06 - 1921



மறைவு 05 - 07 - 2003

திருமதி
### இராஜதுரை எலிசபெத்

சொந்தங்கள் யாவும் துடித்து ஏங்கி நின்றிட
பந்தங்களை விடுத்தே பரலோகம் சென்றிட்டீர்.
இந்த உலக வாழ்வு இனி வேண்டாமென்றே நீரும்
நொந்த உள்ளங்கள் கலங்கிடப் போனீரோ எமைவிட்டு?

பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

இல. 10, கோவில் வீதி, யாழ்ப்பாணம். (21045) (25-24-16-13)

## கண்ணீர் அஞ்சலி

### திருமதி ஜெயமாலா மகாதேவன்
(வலி.தெற்கு பிரதேச சபை)

எமது தெல்லிப்பழைக் கால்நடை வைத்திய அலுவலகத்தில் கால்நடை வைத்திய அதிகாரியாக கடமையாற்றும் திரு. பொ.மகாதேவன் அவர்களின் அன்பு மனைவியான திருமதி ஜெயமாலா மகாதேவன் அவர்களின் மறைவுக்காக எமது கண்ணீரைக் காணிக்கையாக்கி அஞ்சலி செலுத்துகின்றோம்.

தெல்லிப்பழை
கால்நடை வைத்திய அலுவலக
உத்தியோகத்தர்களும், பணியாளர்களும்.
(21045) (25-13-16)

## துயர் பகிர்கின்றோம்

தெல்லிப்பழை கால்நடை வைத்திய அலுவலகத்தில் கால்நடை வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றுகின்ற திரு.பொ.மகாதேவன் அவர்களின் அன்புத் துணைவியார்

### திருமதி ஜெயமாலா மகாதேவன்
(வலி.தெற்கு பிரதேச சபை)

அவர்களின் மறைவினால் துயருறும் குடும்பத்தினரது துயரத்தில் நாமும் பங்கேற்பதோடு, கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகச் சமர்ப்பித்து ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

உடுவில்
கால்நடை வைத்தியர்,
அலுவலக உத்தியோகத்தர்களும், பணியாளர்களும்.
(21044) (25-24-13-16)

## துயர் பகிர்கின்றோம்

சண்டிலிப்பாய், கல்லூரி ஒழுங்கையை வசிப்பிடமாகக் கொண்டவரும், எமது கிளைக் குழு 13 இல் உபதலைவராகக் கடமையாற்றி வந்தவருமான

### குட்டியர் இராசதுரை

அவர்கள் 01.08.2003இல் காலமாகிவிட்டார். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன், அவரது ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர், செயலாளர், உறுப்பினர்,
மானி. ப.நோ.கூ.ச. கிளை 13,
சண்டிலிப்பாய் மத்தி.
(21041) (24-13-16)

## நன்றி நவிலல்

அமரர்
### என்.கே.பத்மநாதன் அவர்கள்

எமது நினைவுகளில் நீங்காமல் நிலைபெற்று அமரராகிவிட்ட குடும்பத் தலைமகன் நாதஸ்வர கானகலாநிதி என்.கே.பத்மநாதன் நோயுற்றிருந்தவேளை மிகவும் சிரத்தையெடுத்து அவர் உடல்நலம் பெறவேண்டி உழைத்த யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பு மருத்துவமனைகளைச் சேர்ந்த வைத்தியர்கள், தாதிகள், பணியாளர்கள் அனைவருக்கும்,

யாழ்ப்பாணத்திலிருந்து எமது தலைமகனை கொழும்பு கொண்டு செல்லவும் அவரது புகழுடலை யாழ்ப்பாணம் எடுத்துவரவும் உழைத்த அனைத்துப் பெரியார்களுக்கும்,

அவர் நோயுற்றிருந்தவேளை யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் வருகைதந்து அவரை நலம் விசாரித்தோருக்கும் தளராது தாமாகவே முன்வந்து வேண்டிய உதவிகள் அனைத்தையும் செய்து அவரது நலனில் கண்ணுங்கருத்துமாயிருந்து உழைத்தோருக்கும், அவரது இறுதிச்சடங்கில் கலந்தும் தந்தி, தொலைபேசி, பத்திரிகைகள், துண்டுப்பிரசுரங்கள் மூலமாகவெல்லாம் தமது இரங்கலை அறிவித்தோருக்கும் அவரது பூவுலக விடைபேறு தொடர்பான செய்திகளைப் பிரசுரித்த பத்திரிகைகள் அனைத்துக்கும் அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வில் பங்குபற்றி அவரைக் கௌரவப்படுத்தியோருக்கும் இன்னும் எல்லாவழிகளிலும் பின்நின்று உழைத்த உற்றார், உறவினர்கள், இரசிகர்கள், நண்பர்கள் யாவருக்கும் என்றென்றும் நன்றிக்கடப்பாட்டோடு எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளை நவில்கின்றோம்.

199/4, கில்னர் லேன்,
யாழ்ப்பாணம். (21021) (26-24-13-16) - குடும்பத்தினர்.


## சனிக்கிழமை அதிர்ஷ்டம்




உத்தியோகபூர்வ முடிவுகள்
செல்லுபடியாகும் டிக்கட்
தொடர் இல. 3807930 இருந்து
3825432 வரை
சீட்டிழுப்பு இல. 1423
திகதி 02.08.2003




### வெற்றி எண்கள்
22 28 39 40 44

போனஸ் எண் 26

### ஜக்பொட் பரிசு
ரூபா.1,500,000/- வெல்லப்படவில்லை

| பொருந்திய எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத்தொகை | தொகை |
|---|---|---|---|
| 5 | - | 1,500,000/- | - |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 03 | 100,000/- | 300,000/- |
| 4 | 108 | 10,000/- | 1,080,000/- |
| 3 | 5,502 | 500/- | 2,751,000/- |
| 2 | 92,085 | 20/- | 1,841,700/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 22ம் எண் (போனஸ் எண் தவிர்த்து) | 113,237 | 10/- | 1,132,370/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூபா.7,085,070/-

இந்த புதன்கிழமைக்கான ஜக்பொட்
### ரூபா.2,375,150/-

தொடர் இல. 2840880க்கு மேற்பட்ட ஊதா நிற டிக்கட்டுகள் 2003 ஆகஸ்ட் 06ம் திகதி புதன்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் தங்கப்பரிசு வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

3813346-1-97
3808295-8-70
3823509-5-01
3812313-4-10
3810486-6-94

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கல் வீதி,
கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக),
யாழ்ப்பாணம்.

PHOENIX O&M

## வீண் குழப்பங்களை விளைவிக்காதீர்;

# இடைக்கால நிர்வாகத்தில் கூட்டணி பங்கு கேட்காது!

### ரவிராஜ் எம்.பி. உறுதிபடத் தெரிவிப்பு



வலி.வடக்கு,ஓக.4

தமிழர் விடுதலைக் கூட்டணி எச்சந்தர்ப்பத்திலும் இடைக்கால நிர்வாகத்தில் பங்கு கேடகப்போவதில்லை. இடைககால நிர்வாகம் விடுதலைப் புலிகளிடமே கையளிக்கப்பட வேண்டும். இதனைக் குழப்பும் நடவடிக்கையில் எந்தவொரு தமிழ் அமைப்போ அல்லது தமிழர்களோ ஈடுபடக்கூடாது. மேற்கண்டவாறு தமிழர் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ந. ரவிராஜ் வலியுறுத்தினார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின மாதாந்தக் கருத்தரங்கு ச.முத்துலிங்கம் தலைமையில் தமிழர் விடுதலைக கூட்டணிக் காரியாலயம் அமைந்துள்ள தந்தை செல்வா அகத்தில் நேற்று இடம்பெற்றது.

இதில் தொடர்ந்து உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் எம்.பி. மேலும் கூறியதாவது:-

இடைக்கால நிர்வாகம் பற்றி எந்த ஒரு விடயத்தையும் தீர்மானிக்கும் உரிமை விடுதலைப் புலிகளுக்கு மட்டுமே உண்டு.

டக்ளஸ் தேவானந்தாவாக இருந்தாலும் சரி, முஸ்லிம் காங் கிரஸாக இருந்தாலும் சரி இடைக் கால நிர்வாகம் சம்பந்தமாக உரையாடுவதாக இருந்தால் விடுதலைப் புலிகளுடனேயே பேச வேண்டும். வேறு எவருடனும் பேசி எந்த ஒரு தீர்வையும் பெற்றுக் கொள்ள முடியாது.

இன்று எம்மீது புலிச்சாயம் பூசி விமர்சிக்கப்படுகின்றது. இது தவறான செயற்பாடாகும். நாம் புலிகளின் கொள்கையை ஆதரிக்கின்றோம்; அவர்களுடைய முடிவை ஏற்றுக்கொள்கின்றோம். அதற்காக எம்மீது எவரும் புலிச்சாயம பூசக்கூடாது.

அண்மையில் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் இடம்பெற்ற விவாதத்தில் பங்கேற்றேன். அதில் கலந்து கொண்ட சிங்களக் கட்சிகளின் பிரதிநிதிகள், எம்மை புலிகளை வழிபடுபவர்களாகவும், புலிகளின் கைப் பொம்மைகள் என்றும் விமர்சித்தார்கள். அதற்கு நான் பதிலளிக்கையில்,

"பிறரின் சொற்படி நாம் பணியாற்றுபவர்கள் அல்லர். உண்மையில் விடுதலைப் புலிகளின் கொள்கையை நாம ஏற்றுக்கொண்டமையால் அவர்களுடன இணைந்து செயற்படுகின்றோம் என்று தெரிவித்தேன். இதனை யாரும் தவறான கண்ணோட்டத்தில் பார்க்கக்கூடாது.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு கூட்டணியினர் ஆகிய நாங்கள் எப்போதுமே ஜனநாயக ரீதியில் ஆதரவு வழங்குகின்றோம்.

மக்களால் தெரிவுசெய்யப்பட்ட நாங்கள் எப்போதும் எமது மக்களுககாக எந்த அர்ப்பணிப்பையும் செய்வதற்குத் தயாராகவுள்ளோம்.

நிரந்தர சமாதானத் தீர்வு கிடைத்த பின்னரே ஆயுதத்தைக் கைவிடுவது பற்றி விடுதலைப் புலிகளுடன் பேசலாம். அத்தகைய ஒரு சூழ்நிலை உருவாகாமல் ஒருபோதும் தமிழீழ விடுதலைப் புலிகளை ஆயுதங்களைக் கீழே வைக்கச்சொல்லி கேட்கப்போவதில்லை. எங்களுடைய கட்சியில் உள்ள பிரச்சினைக்கு கட்சி உறுப்பினர்கள்தான் முடிவு எடுக்கவேண்டும். தமிழ் மக்களின் ஆதரவு இல்லாமல ஒருபோதும் கூட்டணியினர் இயங்கமுடியாது.

தமிழர் விடுதலைக் கூட்டணிமீது தென்னிலங்கையில் திட்டமிட்டு விஷமத்தனமான பிரசாரம் ஒன்றினை தெனனிலங்கை இனவாதிகள் செய்து வருகின்றனர்.

இன்றைய அரசியல் சூழ்நிலையானது சிங்கள பேரினவாதிகளை தர்மசங்கடத்திற்கு உள்ளாக்கியுள்ளது. ஆனால் நாங்கள் ஒருபோதும் எவரையும் முற்றாக நம்பத்தயாரில்லை. (ஒ-86-ரி)

## வீட்டு முற்றத்தில் கைக்குண்டுகள்: பெண் உட்பட மூவர் கைது!

மாத்தறை,ஓக.4

வெலிகம, படவெல பிரதேசத்திலுள்ள வீடொன்றின் முற்றத்தில் புதைக்கப்பட்டிருந்த வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட ஆறு கைக்குண்டுகளைப் பொலஸார் அண்மையில் கண்டெடுத்தனர்.

இது தொடர்பாக பெண்ணொருவர் உட்பட மூன்று சந்தேக நபர்களைக் கைது செய்த வெலிகமப் பொலீஸார், அவர்களை மாத்தறை நீதிவான் முன் ஆஜர் செய்தனர். அவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

முக்கிய சந்தேக நபர் வெலிகமவிலுள்ள வர்த்தகரொருவரின் புதல்வராவார். இவர் தனது தோழியின் வீட்டு முற்றத்திலேயே கைக்குண்டுகளைப் புதைத்து வைத்திருக்கிறார்.

முக்கிய சந்தேகநபரிடமிருந்து பேனை அளவிலான கைத்துப்பாக்கியொன்றையும் பொலீஸார் கைப்பற்றினர்.

வெலிகம பொலீஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## அம்பாறையில் விவசாயிகள் ஊர்வலம்

கல்முனை,ஓக.4

இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட விவசாயிகள் கலந்துகொண்ட ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று நேற்று ஞாயிற்றுக்கிழமை அம்பாறை நகரில் நடந்தது.

நெல்லின் விலையை உத்தரவாதப் படுத்தவேண்டும், விவசாய இரசாயனப் பொருள்களின் விலைகளைக் குறைக்கவேண்டும், உரமானியக் கொடுப்பனவுகளை மீண்டும் வழங்க வேண்டும்.

- இந்தக் கோரிக்கைகளை வலியுறுத்தியே ஐக்கிய விவசாயிகள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடந்தது.

ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் சென்றவர்கள் அரசைக் கண்டித்து பல கோஷங்களை எழுப்பினர். மணிக்கூட்டுச்சந்தியில் கண்டனக் கூட்டமும் நடத்தினர்.


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



வைத்திய கலாநிதி
நடராசா கிருஸ்ணராஜா அவர்கள்
மல்லாகம் நீதிவான் திருமதி இளங்கோவன்
முன்னிலையில் சமாதான நீதிவானாக
பதவியேற்றதையிட்டு, மகிழ்ச்சியுடன்
வாழ்த்துகின்றோம்.

நாகம்ஸ் உரிமையாளர்,
சுன்னாகம்.

(C29291) (32-12-31)


# மரண அறிவித்தல்கள்

## சிவகுரு யோகராசா

இலந்தைக்காடு, இமையாணன், உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், லண்டன் குறைடன் சிற்றியை வசிப்பிடமாகவும் கொண்ட சிவகுரு யோகராசா கடந்த 27.07.2003 இல் லண்டனில் காலமானார்.

அன்னார் சிவகுரு - சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற துரைசிங்கம் குடும்பத்தினரின் (இ.மி.சபை) அன்பு மருமகனும் மகேந்திரம், தவனேஸ்வரி, தேவராசா (டென்மார்க்) ஆகியோரின் அருமைச் சகோதரரும் சறோஜா, தருமரத்தினம், மஞ்சுளா (டென்மார்க்), சுரேஷ்குமார் (லண்டன்), சீவரத்தினம் (**C.T.B.** பருத்தித்துறை) ஆகியோரின் மைத்துனரும் உஷாந்தன் (ஜேர்மனி), துஷ்யந்தினி, வாசுதரன், துஷைந்தன் (உடுப்பிட்டி அ.மி.த.க.பாடசாலை) ஆகியோரின் அருமை மாமனாரும் பவுஜி (பருத்தித்துறை மெ.பெ.உயர்தர பாடசாலை), தனுஷன் (பருத். ஹாட்லிக்கல்லூரி), அனுதர்ஷன், சிவதர்சன், குருதர்ஷன் ஆகியோரின் அன்புச் சிறிய தந்தையும் டென்மார்க்கிலுள்ள றோனியா, நீயூஜன், நீரூஜியா ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.08.2003) செவ்வாய்க்கிழமை நடைபெற்று, பூதவுடல் எள்ளம்குளம் மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*இலந்தைக்காடு,*
*உடுப்பிட்டி.*
(C29293) (32-12-31)

தகவல்:
தருமரத்தினம்.

## பொன்னையா இராசையா

### (ஓய்வு பெற்ற புகையிரதத் திணைக்கள ஊழியர்)

அரியாலை, இல.88, கனகரத்தினம் வீதியைச் சேர்ந்த பொன்னையா இராசையா அவர்கள் 02.08.2003 சனிக்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான பொன்னையா - அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், இளைப்பாறிய ஆசிரியை பராசக்தியின் அன்புக் கணவரும், சுகந்தி **(U.K.)**, யசோதா (ஜேர்மனி), கஜந்தன் **(U.K.)** ஆகி யோரின் அன்புத் தந்தையும், திலகானந்தன், கோபாலகிருஸ்ணன் ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற ஏரம்பு (ஆசிரியர்) மற்றும் செல்லையா காலஞ்சென்றவர்களான செல்லம்மா, இராசம்மா மற்றும் முத்தம்மா, சரஸ்வதி, கனகம்மா காலஞ்சென்ற கிருஷ்ணசாமி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான அன்னலட்சுமி, பாக்கியம் மற்றும் சரஸ்வதி, விஸ்வநாதன் (ஆசிரியர்), பத்மநாதன், மாணிக்கவாசகர், சிவசோதி ஆகியோரின் அன்பு மைத்துனரும், யமேஸ், பவித்திரன், சரண், ராகுலன், ராஜீபன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.08.2003) திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை எமது உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல. 88, கனகரத்தினம் வீதி,*
*அரியாலை.*
(21056) (12-31)

தகவல்:
திருமதி பராசத்தி
இராசையா (மனைவி).

## குட்டியர் இராசதுரை

### (ஓய்வு பெற்ற மருந்துக் கலவையாளர்)

சண்டிலிப்பாய் மத்தியைப் பிறப்பிடமாகக்கொண்ட குட்டியர் இராசதுரை அவர்கள் 01.08.2003 வெள்ளிக்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குட்டியர் - சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் சரஸ்வதிப்பிள்ளையின் (ஓய்வுபெற்ற தாதியர்) அன்புக் கணவரும் துஷ்யந்தன் (டென்மார்க்), பிரதீபன் (ரூபன்), பார்த்தீபன் (சுகந்தன்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் கீதாஞ்சலி (டென்மார்க்), கலாவதி, பாமினி ஆகியோரின் அன்பு மாமனாரும் அலெக்சிகா (டென்மார்க்), கேதுஜன், சுபாஜன், ஆரூரன் (டென்மார்க்) ஆகியோரின் பேரனும் சின்னத்துரை, அப்புத்துரை, காலஞ்சென்றவர்களான சிவகுரு, தவமணி, ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.08.2003) திங்கட்கிழமை மாலை 4மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கல்லூரி ஒழுங்கை,*
*சண்டிலிப்பாய்.*
(21057) (29-12-31)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.


நாகம்ஸ் சுன்னாகம்
அர்ஜுன், கிரண், கவுண்டமணி நடித்த
பரசுராம் (ரீல்ஸ்)
தினசரி காட்சி : 11.00, 3.00, (பி.நே.)
The World Is Not Enough
இரவு 7.30 (பி.நே.) (007)
(C29232) (31-12)

நிறைஞ்சனாஸ் சங்கானை
முரளி, தேவயானி நடித்த
காதலுடன் (ரீல்ஸ்)
தினசரி காட்சி: 11.00, 2.45, 6.00 (பி.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு
Red Scorpion
தினசரி 8.45 இரவு.
(C29213) (31-12)

ராஜா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தினவெளியீடு
மாதவன், ஜோதிகா நடித்த
பிரியமான தோழி (ரீல்ஸ்)
தினசரி: 10.30,2.30,6.30,
(C/29233) (31-12)

லிபேட்டி அச்சுவேலி
சரத்குமார், தேவயானி, விவேக் நடித்த
தென்காசிப்பட்டணம் (ரீல்ஸ்)

தினசரி: 3.00, 7.00 மணி (புதிய நேரம்)
தினசரி காலை 11.00 மணிக்கு CROUCHING TIGER HIDDEN DRAGON
(C/29231) (31-12-17) சிறந்த கராட்டிச்சித்திரம்.



SHARP be sharp
ஜப்பானியத் தொழில்நுட்பம் இப்பொழுது யாழ்ப்பாணத்தில்



உத்தரவாதத்துடன் கூடிய பணத்திற்கேற்ற பெறுமதி.
யாழ் நகரிலேயே அனைத்துச் சாதனங்களுக்குமான உதிரிப்பாகங்களை (Spare Parts) பெற்றுக்கொள்ளலாம்.
நிபுணத்துவம் மிக்கவர்களால் விற்பனைக்குப் பிந்திய சேவைகளை யாழ் நகரிலேயே பெற்றுக்கொள்ளலாம்.
Browns Electronics Live it up
Browns Group of Companies
இல.89, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 021-2225150

# நிலாவெளிப் பகுதியில் வாகனம் கடத்தல்; சாரதி உட்பட நால்வரைக் காணவில்லை!

திருகோணமலை - நிலாவெளி வீதியில் உள்ள ஆத்திமோட்டைப் பகுதியில் வைத்து கடந்த சனிக்கிழமை காலை 10 மணியளவில் ஆறு பேர் கொண்ட குழுவொன்றினால் 'எல்ப்' வாகனம் ஒன்று கடத்தப்பட்டது.

வாகனம் கடத்தப்பட்டபோது சாரதி உட்பட நால்வர் இருந்துள்ளனர். அவர்கள் என்னவானார்கள் என்பது தெரியவில்லை. வாகனத்தில் 2லட்சத்து 30ஆயிரம் ரூபா பெறுமதியான மா, சீனி, சொக்கலேட் உட்பட அத்தியாவசிய சாமான்கள் இருந்துள்ளன.

கடத்தல் பற்றி உப்புவெளிப் பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இதுவரை யாரும் கைதுசெய்யப்படவில்லை; வாகனமும் கண்டுபிடிக்கப்படவில்லை.

# காய்ச்சல் நோயாளிகள் எண்ணிக்கை அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.4

குடாநாட்டில் காய்ச்சலினால் படிக்கப்படுவோரின் எண்ணிக்கை கடந்த சில வாரங்களாக அதிகரித்திருப்பதாக யாழ். போதனா வைத்தியசாலை பதிவேடுகளிலிருந்து அறியமுடிகின்றது.

'வைரஸ்' காய்ச்சல் உட்பட பல வகையான காய்ச்சல் நாளுக்குநாள் மிக வேகமாகப் பரவிவருகின்றது.

இதனால், யாழ். வைத்தியசாலையில் காய்ச்சல் 'வார்ட்டு'கள் நிரம்பி வழிவதையும் காணமுடிகின்றது.

விடுதிகளிலுள்ள கட்டில்கள் நிரம்பியுள்ளதால் விடுதிகளின் வெளி விறாந்தைகளில் நோயாளிகள் பாய்களில் தங்கவைக்கப்பட்டிருப்பதையும் அவதானிக்க முடிகின்றது.

இதேவேளை -

தற்போது மழை பெய்ய ஆரம்பித்துள்ளதால் காய்ச்சலினால் பீடிக்கப்படுவோரின் எண்ணிக்கை வரும் வாரங்களில் மேலும் அதிகரிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-4)

## இத்தாலி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடற்படையினரிடம் சிக்கிக்கொண்ட அப்படகுகளில், சட்டவிரோதமாக இத்தாலி செல்வதற்காக 23 பேர் இருப்பது தெரியவந்தது.

அவர்கள் அனைவரையும் கைது செய்த கடற்படையினர், கொழும்புத் துறைமுகப் பொலீஸாரிடம் ஒப்படைத்தனர். (ஐ-12)

## அரசு - புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பார்வையிட்டார். அங்குள்ள அகதிகளுடன் கலந்துரையாடி அவர்களின் நிலையைக் கண்டறிந்தார்.

அதைத்தொடர்ந்து கொழும்புத்துறை துரையப்பா மகாவித்தியாலத்துக்கு முற்பகல் 11.45 மணியளவில சென்றார். ஜப்பான் தேசியக் கொடியை அசைத்து, அணிவகுத்து நின்ற மாணவர்கள் அமைச்சரை வரவேற்றனர்.

ஜப்பான் உதவியுடன் 'யுனிசெவ்' அமைப்பு நடைமுறைப்படுத்தவுள்ள தாய்மார் மற்றும் குழந்தைகள் நலன திட்டத்தை அமைச்சர் அங்குரார்ப்பணம் செய்தார்.

இலங்கை வெளிவிவகார பிரதி அமைச்சர் லால் தர்மப்பிரிய கமகே, 'யுனிசெவ்' இலங்கைப் பிரதிநிதி கெட் சையன் ஆகியோர் அமைச்சருடன வந்திருந்தனர்.

யாழ்.விஜயத்தின் போது துரையப்பா மகா வித்தியாலயத்தில் உரையாற்றிய போது விடுத்த அறிக்கையிலேயே ஜப்பானிய பிரதி அமைச்சா யானோ, அரசும், புலிகளும் பேச்சுக்களை விரைவில் ஆரம்பிக்க வேணடும் என்பதை வலியுறுத்தினார்.

சமாதான முயற்சியில் முன்னேற்றம் காண முதலில் சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்பட வேண்டும் எனவும், கூடிய விரைவில் விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுக்களுக்குத் திரும்பத் தான் கோரிக்கை விடுப்பதாகவும் அவர் அறிக்கையில் கூறியிருக்கிறார்.

வடக்கு - கிழக்கில் இடைக்கால நிர்வாகம் ஏற்படுத்துவது தொடர்பாகக் குறிப்பிட்டிருக்கும் அவர், இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் ஆக்க பூர்வமான சமரசப் பேச்சுக்கள் மூலம இரு தரப்பினரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஓர் உடன்பாட்டை எட்டுவர் என்று தான் நம்புவதாகவும் கூறியிருக்கிறார். (ஐ-3-5)

## ஜோன் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதன் பின்னர் யாழ்ப்பாணத்தில் சிறைச்சாலை ஒன்றை அமைக்கும் திடடம் குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் அமைச்சர் ஆராய்வார் சிறைச்சாலை அமைக்கத்திட்டமிடப்பட்டுள்ள இடங்களையும் அவர் பார்வையிடுவார்.

பொலீஸ் மா அதிபர் ரி.ஈ.ஆனந்த ராஜாவும் அமைச்சருடன் வருகின்றார். (ஐ-3)

## தமிழீழக்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறிலங்காப் பொலீஸாரின் நடவடிக்கைகளை சமீபத்தில் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் சாடியுள்ளனர். பொலஸ்துறையில் அனுபவம் மிக்கவர்களும் யுத்தநிறுத்த கணகாணிப்புக் குழுவில் அங்கம் வகிக்கின்றனர். எதிர்காலத்தில் பயிற்சி பெற்ற ஒரு பொலீஸ் படைப் பிரிவொன்றும் கண்காணிப்புக்குழுவில் இடம்பெறவேண்டும் என்றும் டெலிவ்சன் தெரிவித்தார். இது சிறிலங்கா பொலீஸாரை அவமதிக்கவில்லையா? என்றும் அப்பத்திரிகை கேள்வி எழுப்பியுள்ளது. (ஐ)


வேலையாள் தேவை

எமது நிறுவனத்தில் வேலைசெய்ய ஆண் உதவியாளர் தேவை. 06-08-2003 புதன் 11.00 மணிக்கு நேரில் வரவும்.

இணுவில் பொருளியற் கல்லூரி

கே.கே.எஸ்.றோட், இணுவில்.

(21053) (14-17)


## வடமராட்சி வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசச செயலர் எஸ்.சூரியகுமாரன் தலைமையில் சமாச உறுப்பினர்களும், கண்காணிப்புக் குழு சார்பில் யாழ்ப்பாணத்தில் உள்ள கண்காணிப்புக்குழு அதிகாரி ஒருவரும் கலந்துகொண்டனர்.

இக்கலந்துரையாடலின் போது இந்திய மீனர்களின் அத்துமீறல், படகுகளைக் கரைக்குக் கொண்டுவரவும், கடலுக்கு எடுத்துச்செல்லவும், கடலில் வாள் வெட்டுதல், தொழிலுக்குச் செல்லும் வேளை மீனவர்களையும், தொழில் உபகரணங்களையும் சோதனையிடல், தொழிலுக்குச் சென்று வருதல், நேரக்கட்டுப்பாடு விதித்தல் போன்றன உட்பட எட்டுக்கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு ஆராயப்பட்டன.

கோரிக்கைகள் ஆராயப்பட்ட வேளை சில கோரிக்கைகள் தொடர்பாக படையினருக்கும், மீனவர் சங்கப் பிரதிநிதிகளிடையேயும் வாக்குவாதங்கள் ஏற்பட்டன. இருப்பினும், இறுதியில் கோரிக்கைகளுக்கு இணக்கமான முடிவுகள் எட்டப்பட்டன.

இந்திய மீனவர்களின் அத்துமீறல் தொடர்பாக ஆராயப்பட்டபோது, இவ்விடயம் தொடர்பாக அரசாங்கமும, கடற்படையினருமே நடவடிக்கைகள எடுக்கவேண்டும் என இராணுவத்தரபபினரால் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அதிகாரி கருத்துத் தெரிவிக்கையில், இந்திய மீனவர்கள் அத்துமீறல் தொடர்பாக அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளோம். இது ஓர் அரசியல் பிரச்சினை. இதனை இலங்கை - இந்திய அரசுகளே தீர்த்துக்கொள்ளவேண்டும. இந்திய மீனவர்களின் அத்துமீறல்களினால் மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை நன்கு அறிவோம். இதனை அரசின் கவனத்துக்கு கொண்டுவருவோம் - எனக்கூறினார்.

முடிவு எடுக்கப்பட்ட விடயங்கள் அமுல் செய்யப்படாவிடின் மீண்டும் இது போன்ற ஒரு சந்திப்பை ஏற்படுத்தி பிரச்சினைகள் தீர நடவடிக்கை எடுக்கப்படும் என கண்காணிப்புக்குழு அதிகாரி சந்திப்பின் முடிவில் தெரிவித்தார். (ஐ-173-182)

## மனித உரிமை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பலாலி இராணுவத்தளப் பொறுப்பதிகாரியுடன் தொடர்புகொண்டு சம்பந்தப்பட்ட சிப்பாயை பலாலி இராணுவ அதிகாரிகளிடம் ஒப்படைத்தார்.

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் இராணுவத்தில் இணைந்த அச்சிப்பாய், அன்றிலிருந்து யாழ். மாவட்டத்திலேயே கடமையாற்றி வந்தார் என்றும்-

தற்போது மானிப்பாய் ஆனைக்கோட்டைப்பகுதியில் உள்ள 513 ஆவது படைப் பிரிவில் கடமையாற்றும் அவர், அங்கு தனக்கு வழங்கப்பட்ட கடுமையான தண்டனையை ஏற்க முடியாத காரணத்தினாலேயே மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் சரணடைந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சரணடைந்த சிப்பாய் கடமையாற்றிய முகாமில் அவருக்கு கடுமையான தண்டனை வழங்கப்பட்டது தொடர்பாகவும், அவர் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்டது குறித்தும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகம் விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளது. (ஐ-5)

## கொடியேற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆலயத்தினுள் அர்ச்சனைச்சீட்டு வழங்கப்படும் இடத்தில் வைத்தே இப்பெண் சங்கிலியை அபகரிக்க முயன்றார். இவரிடமிருந்து ஒரு தொகைப் பணமும் சங்கிலித்துண்டுகளும் மீட்கப்பட்டுள்ளன.

சங்கானை பிளாக் வீதியைச் சேர்ந்த கதிரவேலு சத்தியவதி (வயது-60) என்பவரின் 5 பவுன் சங்கிலி, நல்லூரைச் சேர்ந்த கந்தையா சின்னாச்சி (வயது-69) என்பவரின் 6 பவுன் சங்கிலி, சுண்டுக்குளியைச் சேர்ந்த அருமைத்துரைநாயகம் பத்மாவதி என்பவரின் மூன்று பவுண் சங்கிலி ஆகியனவே நேற்று முதல்நாள் திருவிழாவின்போது திருடப்பட்டன என்று சிறப்புச் செயலணி அலுவலகத்தில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (ஐ-3-6-86)


★ வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது!! ★

த.தியாகராசாவின்

பௌதிகப் புவியியல்

❑ A/L புவியியல் தேர்வுக்கான சூழற் புவியியல் பாடத்திட்டத்தைத் தழுவி எழுதப்பட்டது.

❑ எங்கும் கிடைக்கும். (21042) (12-14-17)

BIT பயிற்சி நெறிகளுக்கான இலவச கணனிக் கருத்தரங்கு

காலம்: 05-08-2003

நேரம்: காலை 10.00 மணி

குறிப்பு: ★ பதிவுகள் யாவும் முன்கூட்டியே பதிவுசெய்து கொள்ளவும்.

★கருத்தரங்கு இந்திய விரிவுரையாளர்களால் நடத்தப்படும்

Soft View Computer College
No.43, Arasady Road,
Thaddatheru Junction,
Jaffna. (21017) (32-14-17)

Director
SCC

IIS

புதிய பிரிவுகள் ஆரம்பம்

காலம் : 16.08.2003

காலை 10.00 மணி

அனைத்து விதமான Diploma கற்கை நெறிகளும் ஆரம்பமாகவுள்ளன.

புலமைப் பரிசில் திட்டத்தில் கல்வியாண்டு 2002/2003 இல் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களும் இப்பிரிவில் இணைந்து கொள்ள முடியும்.

மேலதிக விபரங்கள்: 11.08.2003 திகதிய உதயனில்.

இயக்குநர்
IIS, யாழ்ப்பாணம்.



பவர் செலுலர் ட்ரேடிங் கம்பனி

I.D.D ஒரு நிமிட அழைப்பு 25/=

யாழ்.நகரில் மேசைத் தொலைபேசியை முதன் முறையாக அறிமுகம் செய்த நிறுவனம்.

மக்களின் தோழன் உறவுகளின் பாலம் தொலைவில் வசிக்கும் உறவுகளுடன் அருகில் இருந்து உரையாடுவதுபோல் ஒரு துரித சேவை. வெளிநாட்டில் இருந்துவந்த உறவுகள் பிரிந்துசெல்லும் வேதனையைத் தவிர்க்கவேண்டும் என்பதே எமது சேவை.

கவலை வேண்டாம். எமது நிறுவனத்தின் துரித சேவையால் உங்கள் உரையாடல்களைத் தொடருங்கள்.

எமது சேவை நகரத்திற்கும் கிராமங்களுக்கும் உடனுக்குடன் இணைப்புக்களுடன் பெற்றுத்தரப்படும்.

எமது தொடர்புகளுக்கு: 071 2399220, 0777 242416, 0777 584896
0712 384624, 077 6090924, 0712 387172

185 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
ராஜா தியேட்டர் அருகில்.

(21001) (32-14-17)




இந்திய சாஸ்திரியார் வருகை



முதன்முறையாக யாழ்ப்பாணப் புண்ணியபூமிக்கு வருகைதந்துள்ளார்

பரம்பரை ஜோதிடர் புகழ்பெற்ற

S.N.குமாரசாமி

கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத் தடை, தொழில் முன்னேற்றம் இன்மை, கல்வித் தடையா? குழந்தைப் பாக்கியம், தீராத வியாதியா? மற்றும் எந்தப் பிரச்சினைகளுக்கும் நேரில் சந்திக்கவும்.

(காலை 9மணிமுதல் மாலை 5மணிவரை)

ஸ்ரான்லி லொட்ஜ்

இல.711, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

T.P. : 077-6146499, 021-2226188

(யாழ்.இந்துக் கல்லூரிக்கு அண்மையில்)

(28-14-17) (21048)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.08.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.